குருபாதம்

# ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 38 ] சித்தார்த்தி ஆண்டு ஆவணித்திங்கள் 10—9—79 [ இதழ் 10

தருமை ஆதீனம்

வேளூர்

ஆலயத்திற்கு

உபயமாக வந்துள்ள

யானை

★

பெயர்:

தையல்நாயகி



தருமையாதீனக் குருமுதல்வர்



ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ

குருபாதம்

# 'ஞானசம்பந்தம்"


தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 38 | 10-9-79 | இதழ் 10


## உட்பொருள்



| எண் | | பக்கம் |
|---|---|---|
| 1 | நவராத்திரிப் பெருவிழா | 405 |
| 2 | தருமை ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் வழங்கிய ஆசியுரை... | 409 |
| 3 | கடிதங்கள் ... | 415 |
| 4 | திருமயிலாடுதுறை திருவிளநகர் தலச் சிறப்புக்கள் ... | 421 |
| 5 | தொகைப்பாட்டு ... | 431 |
| 6 | தவராசர் குமரகுருபரர் | 436 |
| 7 | செய்திகள் ... | 442 |
| 8 | எதிர்காலம் ... | 448 |



உ

குருபாதம்

## ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள்வாக்கு

—★—

முன் அளவில் மாக்களுக்கு
முத்தி கொடுத்தஅருள்
என் அளவில் சும்மா
இருப்பதேன் – முன் அளவில்
சீர்பெற்று ரேல்உன்
திருவருளொத் தாசையன்றி
ஆர்பெற்றுர் சொக்கநா தா.

—சொக்கநாத வெண்பா. 56


ஆசிரியர் :-

வித்துவான்

**இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள்**

துணையாசிரியர் :-

மகாவித்துவான்

**சி. அருணைவடிவேல் முதலியார்.**



ஆண்டுச் சந்தா உள்நாடு ரூ, 9.
ஆண்டுச் சந்தா சிலோன் ரூ 11.
ஆண்டுச் சந்தா வெளிநாடு ரூ. 17.
ஆயுள் சந்தா உள்நாடு ரூ. 100.
ஆயுள் சந்தா வெளிநாடு ரூ. 125.

உ
குருபரன் துணை

# ஞானசம்பந்தம்

மலர் 38 | சித்தார்த்தி - ஆவணி - 10—9—79 | இதழ் 10

திருச்சிற்றம்பலம்

பொன்தயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. — சம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

## நவராத்திரிப் பெருவிழா

**அடிப்படைக்காரணம் :**

பலநூறு ஆண்டுகளுக்கு முன்னரே நாகரிகமும், பண்பாடும் பெற்று விளங்கினர் நமது முன்னோர். அவர்களது நாகரிகச் சிறப்பிற்கும், பண்பாட்டு வளர்ச்சிக்கும், அவர்கள் வாழ்வில் மகிழ்ந்து கொண்டாடிய சமயம் மற்றும் சமூக விழாக்களே அடிப்படைக் காரணங்களாக அமைந்தன. ஒருங்கிணைந்த சமூகக் கட்டமைப்பு; விருந்தோம்பும் பண்பாடு; கவலைகளை மறந்து துய்த்து வாழ வழி கோலியமை; பக்தி உறைப்பு; வணிகச்சிறப்பு; நாகரிகக்கலப்பு; கலை வளர்ச்சி போன்ற சிறப்புக்களுக்கெல்லாம் நமது விழாக்கள்

வழிகோலின. சங்க இலக்கியங்களிலேயே, காவிரிப் பெருவிழா; கார்த்திகை விளக்கீடு; ஆதிரை நாள்விழா போன்ற விழாக்களைப் பற்றியகுறிப்புக்கள் உண்டு. திருஞானசம்பந்தப்பெருமான் பூம்பாவைப் பதிகத்தால் அக்காலத்துக் கொண்டாடப்பெற்ற பல சமய விழாக் களை அறியமுடிகிறது

**நவராத்திரி வரலாறு :**

சிவ வழிபாடும். சக்தி வழிபாடும் தமிழர்களின் தொன்மையான வழிபாட்டு மரபில் மேற்கொள்ளப் பெற்றிருந்தன. மற்றும் திருமால், முருகன், பலதேவன் போன்ற கடவுளர் வழிபாடுகளைப் பற்றிய குறிப்புக்களும் சங்க இலக்கியங்களுள் உள்ளன. பரிபூரண னை சிவபரம்பொருளின் அருளைச் சக்தி என வேறு பிரித்துப் போற்றினர் நம்முன்னோர். 'அருளது சத்தியாகும் அரன் தனக்கு' என்பது சிவஞானசித்தியார். இச்சக்தியையே, நம் இன்றியமையாத் தேவைகளை வழங்கும் அருளிப்பாடு நோக்கிக் கொற்றவை, இலக்குமி, கலைமகள் என வேறுபிரித்துப் போற்றி வழிபடத் தொடங்கினோம். பிற்காலச் சமய நூல்கள் இச்சத்தி பேதங்களைப் பலவாறு பிரித்துக் காட்டினும் ஒரே அருட்சக்தியின் முக்கூறுகளாகவே நாம் சக்திவழி பாட்டைப் போற்றி வருகிறோம். இம்மூவித ஆற்றல்களையும் வழங்கும் அம்மைக்கு நாம் எடுத்துவரும் ஒன்பதுநாள் வழிபாடே 'நவராத்திரி' வழிபாடு என்று போற்றப்பட்டு வருகிறது.

**நவராத்திரி விழா :**

நவராத்திரி என்பது வேனிற்காலமாகிய (வசந்தருது) சித்திரை மாதத்தில் வளர்பிறை பிரதமை முதல் ஒன்பதுநாள் உமாதேவியைக் குறித்து விரதமிருந்து பூசிக்கும் வசந்த நவராத்திரியையும், கார்கால மாகிய (சரத்ருது) புரட்டாசி மாதத்தில் வளர்பிறை பிரதமை முதல் ஒன்பது நாள் பூசிக்கும் சாரதா நவராத்திரியையும் குறிக்கும். இந் நாட்களில் தேவியைப் பூசிக்கவேண்டிய இன்றியமையாமை என்னவெனில் வசந்தருது, சரத்ருதுவாகிய இரண்டு ருதுக்களும், எம னுடைய இரண்டு கோரைப் பற்களுக்குச் சமமாக உள்ளவை. அவ் விரண்டனுள் வசந்தருதுவில் வெப்பமிகுதியால் அம்மை முதலிய நோய்களும், சரத்ருதுவில் தட்பமிகுதியால் காலரா முதலிய நோய்களும் பெருகி மக்களைத் துன்புறுத்துவதால் அவற்றினின்றும் விடுதலைபெற உலகமாதாவாகிய உமாதேவியை விரதமிருந்து பூசித்தல் வேண்டும். புரட்டாசி மாதத்தில் நவராத்திரியைப் பத்து நாட்கள் கொண்டாடுவதால் தசராத்திரி என்றும் 'தசரா' என்றும்

வழங்குவர் இஃதன்றிப் பொதுவாக அம்பிகையைப் பூசித்தற்குரிய தினங்கள் மங்களவாரம், சுக்கிரவாரம், கிருஷ்ணபட்ச சதுர்த்தசி, பிரதோஷம் முதலியனவாம்.

**பூசிக்கும் முறை :**

அமாவாசையன்று ஒருவேளை உணவுடன் உபவாசம் இருந்து, அடுத்த ஒன்பது நாட்களும் பால், பழம் என்பன மட்டும் உண்டு மூன்று வேளைகளிலும் பூசித்தல் வேண்டும். தேவியைக் கும்பத்திலோ (குடம்) அல்லது பிம்பத்திலோ (உருவம்) மந்திரம், பாவனை முதலியவற்றால் விதிப்படி ஆவாகனம் செய்து, இவ்விரதத்தை இயன்ற மட்டும் சிரத்தையுடன் மேற்கொள்ளுகின்றேன் எனச் சங்கற்பம் செய்து கொண்டு நவராத்திரி பூஜையைத் தொடங்க வேண்டும். முதல் மூன்றுநாள் தேவியை வீரங்கொடுக்கும் துர்க்கையாகவும், அடுத்த மூன்றுநாள் செல்வம்கொடுக்கும் இலக்குமியாகவும், அதற்கடுத்த மூன்றுநாள் கல்வியளிக்கும் சரஸ்வதியாகவும் பாவித்துப் பூசிக்கவேண்டும்.

**நவராத்திரித் தத்துவம் :**

கடைசி மூன்றுநாளும் சரஸ்வதிதேவியாசப் பாவித்துப் பூசிப்பதனுல் இதன் இறுதிநாள் சரஸ்வதிபூஜை என வழங்கப்படுகிறது. இவ்வொன்பது நாட்களும், விரதங்காத்துக் கொண்டாட இயலாதவர்கள், கடைசி மூன்றுநாட்களிலாவது முறையே துர்க்கை, இலக்குமி, சரஸ்வதியாகப்பாவித்து ஒவ்வொருநாள் பூசிக்கவேண்டும். ஒன்பதாவதுநாள் எல்லா ஆயுதங்களையும் கொலுவில் வைத்துப் பூசிப்பதால் ஆயுதபூசை என்றும் வழங்கப்பெறும். தேவி அண்டங்களை எல்லாம் படைப்பவள் என்பதை உணர்த்தவே பொம்மைகளாலான கொலு வைத்து இந்நாட்களில் கொண்டாடுகின்ருேம். தொடக்கநாளாகிய பிரதமை அன்று அஸ்த நட்சத்திரமும் சேர்ந்திருப்பது சிறப்பாகும், பஞ்சபாண்டவர்கள் வனவாசத்திற்குச்செல்லும்போது தமது ஆயுதங்களை ஒரு வன்னிமரப் பொந்தில் வைத்துவிட்டுப் போனதாகவும், பின்னர் திரும்பவந்து அவற்றை அவர்களுள் 'விஜயன்' என்னும் அர்ச்சுனன் பூசித்து எடுத்துக் கொண்டதாகவும் பத்தாவதுநாள் பேசப்படுவதால் அந்நாளை விஜயதசமி என்று கொண்டாடுகின்றனர். திருக்கோயில் வன்னி மரத்தடியில் அம்பாள் எழுந்தருளி அம்பு போடுவது இவ்வுண்மையை வலியுறுத்தும்.

**பன்னலமும் பெற :**

தினந்தோறும் காலையில் நீராடி, நித்தியகடன்களை முடித்துக் கொண்டு தேவியைப் பூசிப்பதுடன் ஒவ்வொரு நாளிலும், கன்னிப் பெண்களை (இரண்டு வயதுமுதல் பத்து வயதுவரை) குமாரி, திரிமூர்த்தி, கல்யாணி, உரோகிணி காளிகா, சண்டிகா, சாம்பவி துர்க்கா சுபத்திரா தேவியின் அம்சமாகப் பாவித்துப் பூசித்து உணவு உடை அணிகலன் முதலியவற்றை இயன்றவரை கொடுத்துவர வேண்டுமென்று தேவிபாகவதம் முதலிய நூல்கள் கூறுகின்றன. பத்தாவதுநாளன்று விரதத்தைப்பூர்த்திசெய்து உணவுகொள்ளலாம். இவ்விழாவினை ஆண் பெண் இரு பாலரும் மேற்கொள்ள வேண்டும். ஸ்ரீஇராமபிரான் இந்த நவராத்திரிவிழா விரதமிருந்து சீதாபிராட்டியை இலங்கையிலிருந்து மீட்டு நலம் பல பெற்றார். இவ்விரதம் மேற்கொண்டால் இம்மையில் நல்லன வெல்லாம் கைகூடும்; மறுமையில் இந்திராதி போகங்களும் கிடைக்கும், முடிவில் பேரின்பவீடும் சித்திக்கும். முறையாக இவ் விரதத்தை அனுட்டிக்க இயலாதவர்கள் லலிதா சகஸ்ரநாமம், சௌந்தரிய லகரி, சகலகலாவல்லிமாலை, அபிராமி அந்தாதி, மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ் முதலியவற்றைப் பாராயணம் செய்தும், செய்யக்கேட்டும் பயன் பெறலாம்.

**தருமையில் நவராத்திரி :**

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்தில் கோயில்கொண்டு விளங்கும் பதினெண்திருக்கரங்களோடுகூடிய ஸ்ரீமகாலட்சுமி துர்க்கா தேவிக்கு, உலக நலங்கருதி ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் 22—9—79 முதல் 1—10—79 வரை சதசண்டி வேள்வி நிகழ்த்தத் திருவுள்ளம் கொண்டுள்ளார்கள். அன்பர்கள் நவராத்திரி விரதத்தை பக்தி சிரத்தையொடு மேற்கொண்டு எல்லா நலங்களும் பெற்று உய்வார்களாக.

நாயகி நான்முகி நாரா யணிகை நளினபஞ்ச
சாயகி சாம்பவி சங்கரி சாமளை சாதிநச்சு
வாயகி மாலினி வாராகி சூலினி மாதங்கியென்(று)
ஆகிய யாதி யுடையாள் சரணம் அரண் நமக்கே.

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

26-ஆவது குருமகாசந்நிதானம்

# ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

1—9—79 அன்று நடைபெற்ற

ஆவணிமூலப் பெருவிழாவில் வழங்கியருளிய

# ஆசியுரை

" பண்சுமந்த பாகற்பரிசு படைத்தருளும்
பெண்சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்
விண்சுமந்த கீர்த்தி வியன்மண் டலத்தீசன்
கண்சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை
மண்சுமந்து கூலிகொண் டக்கோவால் மொத்துண்டு
புண்சுமந்த பொன்மேனி பாடுதுங்காண் அம்மானாய் "

## இறைவனின் எளிவந்த கருணை :

இன்றைய தினம் ஆவணிமூலத் திருநாள். ஒரு அடியவர்க்காக ஆண்டவன் அருள்செய்த திருநாள். ஆண்டவன் மணிவாசகருக்காக நரிகளைப் பரிகளாக்கிக்கொண்டுவந்ததும் அன்றிரவே அக்குதிரைகளை நரிகளாக்கியதும் இந்த ஆவணிமூலத் திருநாளில்தான்.

பரிகள் கொண்டுவந்ததும் பின்னர் அவைகளை நரிகள் ஆக்கியதும் வைகையில் வெள்ளப்பெருக்கெடுத்து ஓடவிட்டதும், அவ்வெள்ளப்பெருக்கைத் தடுத்துக் கரைகட்டும் ஆளாய் வந்து முதுகில் புண்பட்டதும் இறைவனின் எளிவந்த கருணைத்திறத்திற்குச் சான்றுகளாகும்.

## நம்மால் ஆவது ஒன்றுமில்லை !

இவ்வுலகம் நடைபெறுவது ஆண்டவனின் அருளால்தான் என்றாலும் யார் யாரைக்கொண்டு எந்த எந்த நிகழ்ச்சிகளை எங்ஙனமெல்லாம் நிகழ்த்துவிக்கலாம் எனக் கருதியே இறைவன் திருவிளையாடல் புரிகின்றான் என்பதனை நன்கு உணரவேண்டும். இந்த உலகத்தில் வாழ்வோர் பலரும் என்னவெல்லாமோ நினைக்கிறார்கள் — திட்டம் போடுகிறார்கள் என்றாலும் அவையெல்லாம் அப்படியே நடைபெறுவதில்லை. மணிவாசகர்கூட அரசாங்கப் பணத்தை

எடுத்து வேறுவழியில் பயன்படுத்தவேண்டும் என்றோ, திருக்கோயில் கட்டவேண்டும் என்றோ எண்ணினார் இல்லை. குதிரைகள் வாங்க வேண்டும் என்றுதான் செல்கின்றார். ஆனால் ஆண்டவன் அருள் அவரை வேறுவிதமாகத் திருப்பிவிடுகின்றது. இதனைத்தான் நம் அருள் நூல்கள் அனைத்தும் நம்மால் ஆவது ஒன்றும் இல்லை என்று கூறுகின்றது.

**வினை என்றால் என்ன ?**

நம் அருளாளர்கள் அனைவரும் கூறும் ஓர் உண்மை இங்கே எண்ணத்தக்கது. யார் எதைச் செய்தாலும் அதன் பயனை அனுபவித்தே தீரவேண்டும் என்பது. அதனை வினை என்கின்றனர்.

வினை என்றால் இன்று பல்லோரும் வேறு ஏதோ சித்தாந்தம் தொடர்புடையது என்று எண்ணிவிடுகின்றனர். வினை என்றால் செயல் என்று பொருள். "வினை முற்றிய தலைவன் தேர்ப்பாகற்கு உரைத்தது" என்று அக இலக்கியங்கள் கூறுகின்றன. இதற்கு என்ன பொருள் ? தலைவன் தன் செயல் முடிந்தபின்னர் தன் தேர்ப் பாகனுக்கு உரைத்தது என்பதுதானே பொருள் ; எனவே வினை என்பதற்குச் செயல் என்பதே பொருள் என்பது தெளிவாகிறது அல்லவா ?

வினை என்பது முன் செய்தது; இது சமயம் செய்துகொண்டிருப் பது; இனிச் செய்வது என்று மூன்று பாகுபாடுகளை உடையது. எந்தச் செயலைச் செய்தாலும் வேலைசெய்தவன் கூலிபெறாமல் போவானா ? கூலிபெற்றவன் அதைக்கொண்டு உண்டும், உடுத்தும் அனுபவிக்காமல் இருப்பானா? அதன் பலனை அனுபவித்துத்தானே தீரவேண்டும். இதில் எவருக்கும் மறுப்பிருக்க நியாயமில்லை. இதைத் தான் நம் ஆதீனக் குருமுதல்வர்,

"அவரவர் வினைவழி அவரவர் வந்தனர்"

என்று கூறுகின்றார். இங்கு ஒரு கேள்வி எழுகின்றது. நன்றாக எட்டுமணி நேரமும் படிக்கும் ஒரு மாணவன் தேர்வில் தோல்வியுறு கின்றான். வீட்டில் சென்று படிக்காமல் ஆசிரியர் சொல்வதனைக் கேட்டே தேர்வில் வெற்றி பெறுபவனும் இருக்கிறானே! இதற்கு என்ன காரணம் ? என்று கேட்கலாம்.

ஒரு உதாரணத்தின்மூலம் நாம் இதனைத் தெளியலாம். பத்து ஆண்டுகளாகப் பதப்படுத்தி நல்ல விளைச்சலுக்குத் தகுந்த நிலமாக மாற்றிவைத்திருக்கும். நிலத்தில் விதை போட்டால் உடனே பலன் கிடைக்கும். இதுநாள்வரை ஒருமுறைகூடப் பதப்படுத்தாத புதிய

நிலத்தில் விதைபோட்டால் அது எதிர்பார்த்த பலனைத்தர முடியாது தானே! அதுபோல ஒரு சில மாணுக்கர்கள் முன் பல பிறவிகளிலும் கற்றும் கேட்டும் பண்பட்ட நிலையில் உள்ளதால் அவர்கள் அறிவு உடனே பலன் அளிக்கிறது. சில மாணவர்கள் இப்பொழுதுதான் புதிதாகக் கற்கவும் கேட்கவும் தொடங்கியிருப்பதால் எட்டுமணி நேரம் படித்தாலும் பயனைப் பெறமுடியாமல் போய்விடுகின்றது. திருவள்ளுவரும் இக்கருத்தில் தான்,

" ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து."

என்று அறிவு பல பிறவிகள்தோறும் தொடர்ந்துவரும் என்பதனை வலியுறுத்துகின்றார்.

நம் குருஞானசம்பந்தர் இவற்றை எல்லாம் உட்கொண்டு தான்,

" அவரவர் வினைவழி அவரவர் வந்தனர்
அவரவர் வினைவழி அவரவர் அனுபவம்
எவரெவர்க் குதவினர் எவரெவர்க் குதவிலர்
தவரவர் நினைவது தமைஉணர்வதுவே "

என்று கூறுகின்றார்.

### கடவுள் கண்ணில்லாதவரா ?

ஸ்ரீ குருஞானசம்பந்தர் இன்றையமக்களின் மனநிலையைப்புரிந்து பாடியிருக்கின்றார். இன்று மக்களில் பலர் பல நேரங்களில் ஆண்டவனை ஏசுவதைப் பார்க்கலாம். " நான் எவ்வளவோ பூஜை செய்கிறேன்; எனக்கு ஏன் இவ்வளவு துன்பத்தைத் தருகின்றாய்; கண்ணில்லாத கடவுளே ! " என்று பலவாறாக ஏசிப்பேசுகிறார்கள். குருஞானசம்பந்தர் இதற்கு மிகவும் ஆழ்ந்து சிந்தித்து விடையும் கூறுகின்றார். அவர் பாடிய ஓர் அருமையான பாடல் இதற்கு மறைமுகமாக விடையைக் கூறுகிறது.

" அனைத்துயிர்க்கும் பாசம் அறுத்து முத்தி கூட்ட
மனத்துயரம் செய்தல் மருந்தோ — மனத்துயரம்
செய்யாமல் தீர்மருந்து சித்தா அறிந்திலையோ
ஐயா என் சொக்கநா தா "

என்னும் பாடலில் விடை இருக்கிறது. உதாரணமாக ஒரு மாணவன் படிக்கும் பொழுது மிகவும் சிரமப்பட்டாலும் பிற்காலத்தில் அது அவனுக்கு மிகவும் பயனைத் தருவதுபோல ஆண்டவன் இவ்வுலக மக்களுக்குத் துன்பம் தருவது. நம் வினையை நீக்கி, விடுதலை அளிக்கவே ஆகும் எனும் உணர்வு வர வேண்டும்.

குருமுதல்வர், இப்பாடலில் "சித்தா! இவ்வுலகில் உள்ள உயிர்கட்கெல்லாம் உள்ள பாசத்தளையை நீக்கி முத்தியைக் கூட்டிவைக்கத்தான் மனத்துயரங்களை மருந்தாகத் தருகிருயா? மனத்துயரம் செய்யாமலே பாசம் தீர்ப்பதர்க்கு மருந்து இல்லையா! எல்லாம் வல்லசித்தரல்லவோ நீ! உன்னுல் ஆகாதது ஒன்றும் இல்லையே எனும் பொருளில் மிகவும் நயமுடன் பாடுகின்ருர்.

இவ்வுலக மக்களுக்கு இறையருளால் துன்பம் ஏற்படுகிறது எனில் அது அவர்கள் செய்த வினையை நுகர்வித்து அவர்களுக்கு விடுதலை அளிக்க இறைவன் செய்யும் அருள் விளையாட்டே ஆகும் என்பதனை உணர வேண்டும். எல்லாம்வல்ல சித்தருக்குத் தெரியாததா?

**இனம் புரியா ஆசையும் மனம் புரியும் விடையும்:**

அருவருக்கத் தக்க பொருளிடத்தும் கூட நம்மில் பலருக்கும் ஆசை ஏற்படுகிறதே! அதற்கு என்ன காரணம்? எனும் கேள்விக்கு மற்றுமொரு பாடலில் விளக்கம் தருகின்ருர். உதாரணமாக இப்பொழுது சமீபத்தில் தினத்தாளில் படித்த ஒரு செய்தியினை நினைவு கூர்வோம். ஒரு வெளிநாட்டுப்பெண் சுற்றுலாவாக இராமேஸ்வரத்தில் வந்து தங்கி இருந்தாள் ஒருவனுக்கு உடல் எல்லாம் குஷ்டம்; பார்ப்பதற்கு அருவருப்பு ஏற்படுத்தும் தோற்றம்; என்ன காரணமோ சொல்லத் தெரியவில்லை - அவனை அவள் விரும்பினுள். இதற்கு நம்மால் காரணம் சொல்ல இயலாவிட்டாலும் பெருஞானியான குருஞானசம்பந்தர் விளக்கம் தருகின்ருர்.

அருவருப்பான ஒரு பொருளிடத்தில் ஒருவனுக்கு இனம்புரியா வகையில் ஆசை ஏற்படுகிறதென்ருல் அவன் செய்த முன்வினையைத் துய்ப்பிக்க ஆண்டவன் அருளும் விளையாட்டு இது என்கின்ருர்.

"அருவருப்பே மெத்தியிடும் ஆகத்தைச் சற்றும்
அருவருக்கத் தோற்றுதில்லை ஐயோ — அருவருக்கத்
தோற்றியிடா தென்ன வினை துய்ப்பித் தறுப்பதற்கோ
சாற்றிவிடாய் சொக்கநா தா"

என்னும் பாடலில் நம் கேள்விக்கு விடை இருக்கிறது. இப்பாடல் உண்மையில் ஆழ்ந்து சிந்திக்கத்தக்கது. அவள் அனுபவிக்க வேண்டிய ஒருவினை உள்ளது. அதனுல்தான் எல்லோரும் வெறுக்கும் ஒரு பொருள்மீது அவளுக்கு இத்தகைய ஈடுபாடு வருகிறது என்பதனை விடையாகக் கூறிவிடுகின்ருர்.

இங்ஙனம் நமக்கு இடை இடையே ஏற்படும் ஐயங்களைத் தீர்க்கும் அருமருந்தாகக் குருஞானசம்பந்தர் பாடிய பாடல்கள் இருப்பதனை நாம் தெளிந்துகொள்ளுதல் சிந்தனைத் தெளிவிற்கு ஏதுவாகும்.

**அவனின்றி அணுவும் அசையுமோ :**

மேலே சொன்னவற்றைக் கூட்டிப் பார்த்தால் நாம் நம் வினையைத்தான் அனுபவிப்பதாக இருந்தாலும் ஆண்டவன் அதனை இயற்றாமல்நாம் ஒருபோதும் ஒரு செயலும் செய்ய இயலாது என்பதனையும் மற்றுமொரு பாடலில் கூறுகின்றார். "இறைவா! நீ இன்னதைச் செய் என்று இயற்ற நாயேனும் சென்று செய்கின்றேனே தவிர நானாகச் செய்தல் இயலாது! நீ இல்லாமல் ஓர் அணுவும் அசையாது என்று கூறுகின்றார்.

"நீ இயற்ற ஓர்பொருளை நிச்சயித்த நாயேனும்
போயியற்றல் செய்யப் புரிகுவேன் — நீயியற்றல்
ஆக்கா தணுவும் அசையுமோ அவ்விகற்பம்
தாக்காத சொக்க நாதா"

என்னும் பாடல் அவ்விளக்கத்தைத் தருகின்றது. ஆண்டவனின் அருளால்தான் எல்லாம் நடக்கிறது என்றால் எங்ஙனம் புரிந்து கொள்வது என்ற தயக்கம் ஒருசிலருக்கு வருகிறது. உதாரணமாக ஒன்றைச் சிந்திக்கலாம் நமது உடலில் உள்ள கைகால்கள் அசைகின்றன — அது தெரிகிறது. ஆனால் உள்ளே கோடிக்கணக்கான அணுக்கள் இருக்கின்றன. அவை நம் அசைவுகளுக்குப் பல்லாற்றானும் துணைசெய்கின்றன. அவை எல்லாம் நமக்குத்தெரிகிறதா?... அதுபோலத்தான் ஆண்டவனின் அருளும் கண்ணுக்குப் புலப்படாவிட்டாலும் காரணமாக இருந்து இயக்குகிறது என்பதை உணர முடிகிறதல்லவா?

**ஆவணிமூல விழாவில் அரியசெய்தி :**

இவற்றை எல்லாம் நன்கு சிந்தித்துப் பார்க்கும் பொழுது மாணிக்கவாசகராக ஒன்றும் செய்யவில்லை; மாணிக்கவாசகர் செயல் பெருமானின் அருளால் நடந்ததே தவிர வேறில்லை எனும் இந்த உண்மையினை இவ்வாவணிமூல விழாவில் தெரிந்து கொண்டால் போதும்; அதுவே விழாவினால் நாம் பெற்றபெரும் பயனாகும்.

இவ்விழாவிலிருந்து நாம் இன்னொரு உண்மையினையும்உணர்ந்து கொள்ளலாம். மாணிக்கவாசகர் தனக்கு நேர்ந்த துன்பங்கள் பலவற்றிலும் கலக்கம் கொள்ளாது இறைவன் தன்னைக் கடைசிவரையிலும் கைவிடமாட்டார் என்று எண்ணி உறுதியோடு வாழ்ந்தார். இந்த எண்ணம் நம் திருத்தொண்டர்கள் பலரிடத்தும் காணலாம்.

**பண்பாடுமிக்க அமைச்சர் :**

இன்றையநாளில் நம் மாநிலக்கல்வி அமைச்சர் அவர்கள் இவ்விழாவில் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்ற இருக்கின்றார்கள்.

அவர்கள் தம் இளமைக் காலம் முதற்கொண்டே தத்துவத்துறையில் பெரிதும்ஈடுபாடுஉடையவர்கள். 25ஆண்டுக்கு முன்பு நமது ஆதீனக் குரு முதல்வர் குருபூஜை விழாத்தொடர்பாக நடைபெற்ற சமயப் பயிற்சி வகுப்பில் கலந்துகொண்டு பயின்றுள்ளார்கள் என்பதும். அதனைப் பன்முறையும் நினைவுகூரும் பண்புள்ளம் கொண்டவர்கள் என்பதும் அவர்களின் பண்பாட்டிற்கு எடுத்துக்காட்டுக்களாகும். நமது ஆதீனத்தின் சார்பில், வெளிநாடுகளிலிருந்து வரும்பல அன்பர் களுக்குச் சைவ சித்தாந்தத்தை நன்கு தெளிவிக்கும் வகையில் 'சைவ சித்தாந்த ஆய்வுமையம்' ஒன்று தோற்றுவிக்கவேண்டும் என்ற எண்ணம் கொண்டுள்ளார்கள். அவர்களின் இந்த எண்ணம் நிறைவேற எல்லாம்வல்ல எம்பெருமானின் அருளை வேண்டுவோம்.

**பட்டம் பெறும் பண்பாளர் :**

இத்தகைய சிறந்த நாளான இன்று சைவசித்தாந்தம், இலக் கியம். பொருளாதாரம், விஞ்ஞானம் போன்ற பல துறைகளிலும் சிறந்த பல அறிஞர்களை அழைத்துப் பாராட்டிப் பட்டம் கொடுப்பது என்பதனை வழக்கமாகக் கொண்டுள்ளோம். ஏறத்தாழ 30 ஆண்டு களாக இங்ஙனம் நடந்துவரும் இவ்விழாவில் இவ்வாண்டு டாக்டர். திரு. வை. இரத்தினசபாபதி அவர்கட்குப் பட்டம் கொடுப்பது என்று செந்தமிழ்ச் சொக்கன் திருவருள் முடிவு செய்தது. இவர் மயிலம் கல்லூரியில் தமிழ் பயின்று பூம்புகார்ப் பேரவைக் கல்லூரியிலும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும் பயின்றும் பணியாற்றியும் சிறந்தவர். ஞானியார் அடிகளிடத்தில் பாடம் கேட்டவர். இப் பொழுது சென்னைப் பல்கலைக் கழகத்தில் டாக்டர் இராதாகிருஷ்ணன் மேல்நிலைக் கல்வி நிறுவனம் - தத்துவத்துறையில் பேருரையாளராகப் பணியாற்றி வருகின்றார். இவ்வாண்டு சென்னைப் பல்கலைக் கழகத்தில் 'அளவையியல்' பற்றி ஒரு கருத்தரங்கம் மிகச் சிறந்த முறையில் நடத்தினார். அதுதான் நமது உள்ளத்தில் இவ்வாண்டு இப்பட்டம் கொடுக்கத் தோற்றுவித்தது. எங்கிருந்தாலும் தாம் இருப்பதற்கு ஏதேனும் ஓர் அடையாளச் சின்னமாகத் தமிழிற்கும் சைவத்திற்கும் பணிசெய்ய வேண்டும் என்ற எண்ணம் உள்ளவர். அவருக்குச் '**சித்தாந்தக் கலைஞர்**' எனும் பட்டத்தினைச் சொக்கநாதர் சந்நிதியில் வழங்கியுள்ளோம். இவர் சித்தாந்தக்கலைக்கும், தத்துவத்துறைக்கும், பணிசெய்து பல்லாண்டு வாழ்வாராக. இவ்விழாவிற்கு வந்து சிறப் பித்த கல்வி அமைச்சர் அவர்கட்கும், பட்டம்பெற்ற பண்பாளர் இரத்தினசபாபதிக்கும் மற்றும் இவ்விழாவில் பங்கு கொண்டுள்ள பக்தர்கட்கும், குழந்தைகட்கும் ஆசிரியர்கள் மாணவ மாணவியர் கட்கும், எல்லா நலன்களும் மென்மேலும் பெருக எல்லாம் வல்ல செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

**கடிதங்கள்:**

## ஆவணிமூலத் திருநாள்

# வாழ்த்துப் பாடல்கள்

அருள்கொழிக்கும் தருமைப்பே ராதீன ஞானகுரு
வாக யாரும்
பொருள் கொழிக்கும் புகழ்கூற இலங்குகின்ற துறவரசே.
போற்றும் சைவம்
தெருள் கொழிக்கும் செந்தமிழோ டோங்கநலம் புரிகின்ற
செம்மை யான
இருள் கொழிக்கும் கண்டத்தான் அடிமறவாச் சண்முகதே
சிகஇஃ தோர்க!

திருமுன்னர்ப் பணிவுடனே எழுதுகின்றேன்; ஆவணியில்
சேரும் மூலத்
தொரு பெரிய விழாவெடுத்துப் புலவரொரு வர்க்கருளின்
ஓங்கும் பட்டம்
மருவவைக்கும் திறம்எவரும் பாரட்ட ஆண்டுதொறும்
வாய்த்தல் ஓர்ந்தேன்;
பெருமைமிகும் சித்தாந்தக் கலைஞரெனும் விருதினையே
பெறுவார் அன்பர்.

பலஅவையில் இனிமைமிகப் பேசுகின்ற பேராளர்;
பன்னூல் ஓதி
நிலவுசில நூலெழுதி டாக்டர்பட்டம் பெற்றுவக்கும்
நிறைவு பூண்டார்;
கருதுமன்பு சாலும்வை இரத்தினசபாபதிஅக்
கண்ணி யஞ்சேர்
விருதுபெறல் அறிந்துமிக உவக்கின்றேன்; அவர் என்றும்
விளங்கி வாழி.

அன்பன்,

சென்னை
1 - 9 - 79

**கி. வா. ஜகந்நாதன்**

டாக்டர் ச. அகத்தியலிங்கம்,
தமிழ்ப்பேராசியர்,
அண்ணுமலைப் பல்கலைக் கழகம்.

அண்ணுமலைநகர்.
29 - 8 - 79.

* மாண்புமிகு தமிழ்நாடு அரசு கல்வி அமைச்சர் அவர்களும், தத்துவமும் தமிழும் தோத்திர சாத்திரங்களும் வல்ல அறிஞர்களும் கலந்துகொண்டு மூன்று நாட்களும் அரிய சொற்பொழிவுகள் நிகழ்த்தி தமிழ்ச் சமுதாயம் பயன் கொள்ளப் பணியாற்றும் சிறப்பு கண்டு உவந்தேன். இத்தகைய பணிகள் மேன்மேலும் நாள் நாளும் கல்வி வளர விழைகிறேன்.

தங்கள்,

**ச. அகத்தியலிங்கம்.**

தவத்திரு குன்றக்குடி அடிகளார்

குன்றக்குடி 623206
30—8—79.

—★—

விழா அழைப்பிதழ் கிடைத்தது. மிக்க மகிழ்ச்சி. விழா இனிதே நிறைவெய்த திருவருளைச் சிந்தித்து வாழ்த்துகின்ரேம்.

**அடிகளார்**
இன்ப அன்பு.

மயிலம் பொம்மபுர ஆதீனம்

**ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் மடாலயம், மயிலம்.**

* * நம் தமிழ் அன்னையைப் போற்றும் முகமாகத் தமிழ்த் திருநாளும் சமுதாயத் திருநாளும் தத்துவத் திருநாளும் பட்டமளிப்பு விழாவும் நடைபெறவிருப்பதில் அறிஞர்கள் பலருடைய சொற்பெருக்குகள் அன்பர்களுக்கு உளவிருந்தாக இலங்குமெனக் கருதுகின்ரேம். தமிழ்நாடு அரசு கல்வியமைச்சர் இவ்விழாவிற் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்ற இருப்பது தனிச்சிறப்புடையதாகும், எங்கள் திரு மடத்தின் மாணவர் டாக்டர். திரு. வை. இரத்தினசபாபதி அவர்களுக்கு "சித்தாந்தக் கலைஞர்" என்ற பட்டம் அளித்துப் பாராட்டு வழங்குதல் எம் பெருமகிழ்ச்சிக் குரியதாம்.

விழாக்கள் இனிது நிறைவேற எங்கள் மயிலம் முருகப்பெருமான் திருவருளும் எங்கள் ஆதி சிவஞானபாலய சுவாமிகள் குருவருளும் துணை புரிகவென வாழ்த்துகின்றோம்.

" சித்தாந்தக் கலைஞரெனத் திகழ்எம்வை ராதமக்குச் செழுமைசான்ற
வித்தகர்க்கோ ருறைவிட மாந் தருமைகுரு மூர்த்தியுவந் தணிசெய் [கின்ற
இத்தகைமை எந்தமக்குப் பேருவகை தருஞ்செயலாம் எழிலார் [கொண்மூ
நித்தமுறை மயிலமலை முருகன்சிவ ஞானியருள் நிறைந்து வாழ்க."

திருமுறை ஆராய்ச்சிக் கலைஞர்
வித்துவான் க. வெள்ளைவாரணன்
பேராசிரியர்
தமிழ்த்துறைத்தலைவர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

142, கனகசபைநகர்
சிதம்பரம்
நாள் : 30—8—79

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் சென்னைப் பல்கலைக்கழகத் தத்துவத்துறைப் பேருரையாளர் டாக்டர் திரு. வை. இரத்தினசபாபதி அவர்களுக்கு இவ்வாண்டு ஆவணிமூலத் திருநாளில் " சித்தாந்தக் கலைஞர் " என்ற சிறப்புப் பட்டமளித்துப் பாராட்டி ஆசி வழங்கி யருளுவது சைவ சமயப் பரன்பர் எல்லோர்க்கும் உவகைதரும் அருள் நிகழ்ச்சியாகும்.

மகாவித்துவான்,
தருமபுர ஆதீன வித்துவான்,
ச. தண்டபாணி தேசிகர்,

மதுரை 21,
31 - 8 - '79.

* தமிழறியும் பெருமான் உள்ளன்பும் சித்தாந்தமும் இருமொழிப் புலமையும் படைத்த உயர்திரு இரத்தினசபாபதி அவர்கட்குப் பட்டமும் பரிசும் அருளிப் பணி கொள்வதையறிந்து மட்டற்ற மகிழ்ச்சி எய்துகிறேன். பட்டம் வழங்கும் நேரத்தில் ஆலவாய் அண்ணல் திருமுன்பு நின்று மனமுருகி விண்ணப்பித்துக் கொள் கிறேன்.

அடியேன்,
ச. தண்டபாணி.

திருமுறை ஆராய்ச்சிக் கலைஞர்,
வித்துவான். க. வெள்ளைவாரணன்
பேராசிரியர்
தமிழ்த்துறைத்தலைவர்
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

142, கனகசபைநகர்,
சிதம்பரம்
30—8—79

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் சென்னைப் பல்கலைக்கழகத் தத்துவத்துறைப்பேருரையாளர் டாக்டர் திரு. வை. இரத்தினசபாபதி அவர்களுக்கு இவ்வாண்டு ஆவணிமூலத் திருநாளில் "சித்தாந்தக் கலைஞர்" என்ற சிறப்புப் பட்டமளித்துப் பாராட்டி ஆசிவழங்கியருளுவது சைவ சமயப் பேரன்பர் எல்லோர்க்கும் உவகைதரும் அருள் நிகழ்ச்சியாகும்.

அன்புடைய அடியார்க்கு எளிவந்தருள்புரியும் இறைவனது பெருங்கருணைத் திறத்தினை விளக்கும் ஆவணிமூலத் திருநாளில் நிகழும் பட்டமளிப்பு விழாவில் தமிழ்நாடு அரசு கல்வியமைச்சர் மாண்புமிகு திரு, செ. அரங்கநாயகம் அவர்கள் சிறப்புரையாற்றுவது சைவமும் தமிழும் தழைத்தினிதோங்க ஞானப்பணி புரிந்துவரும் தருமையாதீனச் சமயப்பணிகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கும் நன்னிகழ்ச்சியாகும். திருவருட்புலமை நலத்தினைவளர்த்துத் தெய்வ நெறிச் சிவம்பெருக்கும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் பொன்னார் திருவடிகளை வணங்கிச் 'சித்தாந்தக் கலைஞர்' என்னும் பட்டம்பெறும் புலமைச்செல்வர் டாக்டர் திரு. வை. இரத்தினசபாபதி அவர்களை உள மகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றேன்.

வெள்ளைவாரணன்.

K. VAJRAVELU MUDALIAR, B. A., L. T.,
Special Officer,
Dept. of Saiva Siddhanta Philosophy
Madurai University

Maduri 21
30 - 8 - '79

மாண்புமிகு கல்விஅமைச்சர் விழாப்பேருரையும் மும்மொழிக் கொண்டல் அவர்களின் சொற்பொழிவும் தருமையாதீனப் புலவர் பாராட்டுரையும் சென்னைப் பல்கலைக்கழகத் தத்துவத்துறை பேருரையாளர் டாக்டர் திரு. வை. இரத்தினசபாபதி அவர்கட்குச் 'சித்தாந்தக் கலைஞர்' என்னும் பட்டம் அளித்து ஆசி அருளுதலும் மிகுந்த மகிழ்ச்சியை உண்டு பண்ணுகின்றன. எல்லாம்வல்ல பரமாசாரியன் திருவருளால் எல்லா நிகழ்ச்சிகளும் செம்மையாக

நடைபெற்று யாவர் உள்ளங்களையும் குளிர்ந்து இன்புறும்படி செய்ய வேணுமாய் வழுத்தி நிற்கின்றேன்.

இங்ஙனம்,
அன்பும் பணிவும் நன்றியும் உள்ள,
**க. வச்சிரவேல் முதலியார்.**

ந. ரா. முருகவேள், எம். ஏ., எம். ஓ. எல்.,
ஆசிரியர் 'திருக்கோயில்'
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,

சென்னை 600 034,
31 – 8 – 79.

* நண்பர் திரு. வை. இரத்தினசபாபதி அவர்கள், திருப்பாதிரிப் புலியூர் ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் அவர்களின் வழிவழிப் புலமை நெறியிலும், வீரசைவத் தத்துவ நெறியிலும், நல்ல புலமையும் ஈடுபாடும் வாய்ந்தவர்! சமய உணர்விலும் ஒழுக்கத்திலும் தலைசிறந்து திகழ்பவர்!

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள், அவரைத் தேர்ந்தெடுத்துச் "சித்தாந்தக் கலைஞர்" என்னும் சிறப்புப் பட்டம் அளித்து, அவரை வாழ்த்தியருளுதல் மிகவும் பொருத்தமுடையதாகும்.

இங்ஙனம்,
தங்கள் அன்பும் பணிவும் மிக்க,
**ந ரா. முருகவேள்.**

**கஸ்தூர்பா காந்தி கன்யா குருகுலம்.**

வேதாரண்யம் - 614 810 :: தஞ்சாவூர் ஜில்லா :: தமிழ்நாடு.

வே. அப்பாகுட்டி,
மேனேஜிங் டிரஸ்டி.
அ. வேதரதனம், B. Sc.,
செயலாளர்.

31—8—79.

தாங்கள் அன்புடன் அனுப்பிய "ஆவணி மூல திருநாள்" அழைப்பிதழ் கிடைக்கப் பெற்றேன.

விழா நிகழ்ச்சி நிரல்கள் அனைத்தும் சிறப்பாக நடைபெறவும் இந்நன்னாளில் தங்களின் மேலான நல்லாசிகளை வேண்டும்.

தங்கள் பணிவுள்ள,
**வே. அப்பாகுட்டி.**

உ

# பெண்களுக்கு மூளை குறைவு

பெண்களுக்கு மூளை குறைவுதான்; ஆணின் மூளையின் எடையை விட பெண்களின் மூளை சராசரியாக 250 கிராம் குறைவான எடையுள்ளது.

மூளை சற்று சிறிது என்பதால் பெண்ணுக்கு புத்திசாலித்தனமும் குறைவு என்று நினைக்கலாமா? புத்திசாலித்தனமும் குறைவுதான் என்கிறார் பிரபல நரம்பியல் நிபுணர் டாக்டர் பி. ராமமூர்த்தி


ஆண்களுக்கு காரணகாரியத்துடன் சிந்திக்கும் ஆற்றல் அதிகமாயிருப்பதற்கும், பெண்கள் அவசரப் பட்டு முடிவுகள் செய்வதற்கும் மூளை எடைக் குறைவு காரணமாக இருக்கலாம் என்று சென்னை வேப்பேரி அரிமாசங்கக் கூட்டமொன்றில் ராமமூர்த்தி கூறினார்.

மூளையின் 'பெருமை'களை அவர் விவரித்தார். மூளையில் 100கோடிக்கும் அதிகமான நரம்பு அணுக்கள் உள்ளன. மூளையை நவீன, 'கம்ப்யூட்டர்' (கணக்கிடும் கருவி) உடன் ஒப்பிடுவது சரியல்ல.

பல லட்சம் ஆண்டுகளாக மனித இனம் உருப்பெற்றபோது வளர்ந்து வடிவம் பெற்றது மனிதமூளை. புதிய செயல்களிலும் சிந்தனைகளிலும் ஈடுபடுவதால் மூளை வளர்ச்சி அதிகரிக்கிறது. கல்வி கற்பிப்பதில் சம்பாவனை முறைதான் சிறந்தது என்றார்.


நன்றி! —தினமணி ஆகஸ்டு - 20

அமெரிக்கநாட்டில் இந்து சமயம் பரப்பும்
யோகிராஜ் சுவாமி சச்சிதானந்த அவர்களுக்கு



தருமையாதீனம்
ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் பொன்னுடை போர்த்து ஆசி அருளல்

தருமையாதீனத்திற்குச் சொந்தமான, வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி திருக்கோயிலுக்கு,
புதிதாக யானை வாங்கிக் கொடுத்த, ஈரோடு திருநகர் காலனியைச் சேர்ந்த
இரத்தினம் ஐயர் குடும்பத்தினர், விநாயக சதுர்த்தியன்று யானையைச் சமர்ப்பித்து



ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களைத் தரிசித்தல்.

தருமை ஆதீனத்திற்குச் சொந்தமான

## வைத்தீஸ்வரன்கோயில் ஆலயத்திற்கு

### விநாயக சதுர்த்தியன்று

# காணிக்கையாக வந்துள்ள யானை


தருமையாதீனத்திற்குச் சொந்தமான புள்ளிருக்கு வேளூர் என்னும் வைத்தீஸ்வரன்கோயில் புகழ்பெற்ற யாத்திரைத்தலம். நாள்தோறும் நம் நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் அன்பர்கள் இத் திருக்கோயில் தரிசனத்திற்கு வருகின்றனர். கார்த்திகை மற்றும் பெரு விழாக்களில் பல்லாயிரவர் வந்து தரிசித்து தங்கள் வினை நீக்கிய அருள்மிகு வைத்தியநாதர், தையல்நாயகி, செல்வமுத்துக்குமார சுவாமி முதலிய மூர்த்திகளை வழிபட்டு நலம்பெறுகின்றனர். நவக் கிரகங்களில் அங்காரகன் வழிபட்டு அருள் பெற்ற சிறப்புடையது. இத்தலம்.

ஈரோடு திருநகர் காலனியைச்சேர்ந்த அன்பர் திரு. இராமமூர்த்தி ஐயர் தம் குடும்பத்தினருடன் பல்லாண்டுகளாக இத்தலத் திருக் கோயிலுக்கு வரும் நியமம் உடையவர். வேளூர்க் கோயிலுக்கு நிலை யாக ஏதாவது செய்ய வேண்டும் என்ற தன் பெற்றோரின் விருப் பத்தைப் பூர்த்தி செய்யும் வகையில் திரு. இராமமூர்த்தி ஐயர் ரூ. 20,000. செலவில் அஸ்ஸாம் மாநிலத்திலிருந்து 3 வயதுள்ள பெண் யானைக்குட்டி ஒன்றை வாங்கிக்கோயிலுக்குக் காணிக்கையாக அளித்துள்ளார்.

26—8—79 விநாயக சதுர்த்தியன்று திரு. இராமமூர்த்திஐயர் ஈரோட்டிலிருந்து இந்த யானைக்குட்டியை லாரியில் தருமையாதீனத் துக்குக் கொண்டுவந்து ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திரு முன்பில் சமர்ப்பித்தார். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் ஸ்ரீ சொக்கநாதர் சந்நிதியில் யானையை நிறுத்தி கஜபூஜை செய்வித்து தையல்நாயகி எனப் பெயர் சூட்டினார்கள். திரு. இராமமூர்த்தி ஐயர் குடும்பத்தினருக்கு ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் பட்டாடை கள் போர்த்திப் பிரசாதங்கள் வழங்கி ஆசியருளினார்கள். அன்று மாலை யானையை ஊர் எல்லையிலிருந்து வேளூர்த் திருக்கோயிலுக்கு மேளவாத்தியங்களுடன் அழைத்துச் செல்லப்பெற்றது. வேளூர்த் திருக்கோயிலில் திரு. இராமமூர்த்தி ஐயர் குடும்பத்தினருக்குக் கோயில் மரியாதைகளுடன் வழிபாடு செய்வித்து பட்டுக்கட்டி பிரசாதம் வழங்கப்பெற்றது.

யோகிராஜ் சுவாமி சச்சிதானந்தஜீ அவர்களும்,

சென்னை உயர்நீதி மன்ற நீதிபதி திரு. செங்கோட்டுவேலன் முதலியவர்களும்



தருமையாதீனம்

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களைத் தரிசித்தல்

# திருமயிலாடுதுறை, திருவிளநகர் தலச் சிறப்புக்கள்

தருமையாதீனத் தமிழ்ப்புலவர்,

வித்துவான். திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ.

சோழவளநாட்டில் காவிரியின் தென்கரைத் தலங்களில் 39, 40 வது தலங்களாக விளங்குவன திருமயிலாடுதுறையும் திருவிள நகருமாகும். திருமயிலாடுதுறை திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் அருளிய மூன்று திருப்பதிகங்களைப் பெற்றுவிளங்கும் தலம். திருவிள நகர் திருஞானசம்பந்தர் அருளிய ஒரு திருப்பதிகத்தைப் பெற்றுத் திகழ்வது.

## 1. திருமயிலாடுதுறை

திருமயிலாடுதுறை இன்று மாயூரம் என்று வழங்கப்பெறுகிறது. தஞ்சைமாவட்டத்தைச் சேர்ந்த தாலுக்காவின் தலைமையகமாக விளங்கும் இந்நகரம், தமிழ்நாட்டின் புகழ்பெற்ற நகரங்களில் ஒன்றாகும். தருமையாதீனம் இந்நகருக்குக் கீழ்பால் விளங்குகிறது.

**வழி :** தென்னிந்தியப் புகைவண்டித் தொடர்களில் சென்னை இராமேசுவரம் நேர்வழியில் பெரியதொரு சந்திப்பாக மாயூரம் விளங்குகிறது. புகைவண்டிச்சந்திப்பிலிருந்து கிழக்கே மூன்று கிலோமீட்டர் தூரத்தில் கோயில் இருக்கிறது. டவுன்பஸ் வசதிகள் உள்ளன. மாயூரம் சந்திப்பிலிருந்து தரங்கம்பாடி செல்லும் கிளை இருப்புப்பாதையில் மாயூரம் டவுன் நிலயத்தில் இறங்கினால் கோயிலை எளிதில் அடையலாம். இவ்வழியில் புகைவண்டிகள் மிகவும் குறைவு.

**தலப் பெருமை :** 'ஆயிரம் ஆனாலும் மாயூரம் போல் ஆகுமா' என வழங்கும் பழமொழி இந்நகரின் சிறப்பை நன்கு விளக்கப் போதிய சான்றாகும். காசிக்குச் சமமாக ஆறு தலங்களைக் கூறுவார்கள். ஒன்று மாயூரம். மற்றவை திருவெண்காடு, திருவையாறு, திருவிடைமருதூர், திருவாஞ்சியம், சாயாவனம் என்பனவாகும். தருமையாதீன முதற்பெருங்குரவர் ஸ்ரீகுருஞான சம்பந்தர், சொன்னால் முத்திதரும்தலங்களுள் ஒன்றாகஇத்தலத்தைக் குறிப்பிட்டருளும் பாடல்,

" தில்லைவனம் காசி திருவாரூர் மாயூரம்
முல்லைவனம் கூடல் முதுகுன்றம் — நெல்லைகளர்
காஞ்சி கழுக்குன்றம் மறைக்காடு அருணைகாளத்தி
வாஞ்சியமென் முத்தி வரும் "

என்பதாகும். தமிழ்நாட்டின் புகழ்பெற்ற இரண்டு பெரிய சைவ ஆதீனங்களை இணைக்கும் திருக்கோயிலாக மாயூரப் பெரியகோயில் விளங்குகிறது. இத்தலத்தில் சுவாமி அம்பாள்கோயில்கள் திருவாவடுதுறை ஆதீனத்துக்குச் சொந்தமானவை யாகவும், முருகப் பெருமான் திருக்கோயில் தருமையாதீனத்துக்குச் சொந்தமான தாகவும் திகழ்கின்றன.

**புராணப் பெருமை :** பார்வதிதேவி மயிலுருவம்கொண்டு இறைவனைப் பூசித்த பெருமையை உடையது இத்திருத்தலம். இத்தலத்தின் புகழ்பெற்ற திருவிழா ஐப்பசிமாதத்தின் இறுதி நாளன்று நிகழும் கடை முக நீராட்டு. கங்கை முதலிய புண்ணிய நதிகள் ஐப்பசி அமாவாசையன்று இத்தலத்துக் காவிரித்துறையில் நீராடித் தங்கள் பாவங்களைப் போக்கிக்கொள்கின்றன. ஆதலின் துலாமாதமாகிய ஐப்பசிமாதத்தில் இங்குநீராடுவோர் புண்ணியநதிகள் பலவற்றிலும் நீராடிய பயன்களைப் பெறுவர் என இத்தலமான்மியம் கூறுகிறது. கங்கை இத்தலத்திற்குவந்து நீராடும் சிறப்பினால் இத்தலம் காசிக்குச் சமமாகும். காவிரித்துறையில் அருள்மிகு விசுவநாதரும் விசாலாக்ஷியும் கோயில்கொண்டுள்ளனர். மேலும் இத்தலத்தில் ஐந்து விசுவநாதர் கோயில்கள் உள்ளன. உத்தரமாயூரம் எனப்படும் வள்ளலார் கோயிலில் காவிரியின் வடகரையில் மேதாதக்ஷிணாமூர்த்தி இடப தேவருக்கு உபதேசிக்கும்மூர்த்தியாக எழுந்தருளிவிளங்குகின்றார்.

இத்தலத்தில் காவிரியாற்றில் இறைவன் தீர்த்தம்கொடுக்கும் இடபதீர்த்தக்கட்டமாகிய துலாக்கட்டம் பெருஞ்சிறப்புடையதீர்த்தக் கட்டமாகும். கடைமுகத் திருநாளன்று மாயூரத்தில் உள்ள எல்லாத் திருக்கோயில்களிலுமுள்ள மூர்த்திகள் திருவீதிஉலாவாக எழுந்தருளி வந்து அருள்மிகு மாயூரநாதரோடு தீர்த்தம் கொடுத்தருளும் கடைமுகத் திருவிழா அகில இந்தியத் திருவிழாக்களில் ஒன்றாகும்.

இத்தலத்துக்குச் சூதவனம், சிகண்டிபுரம், பிரமபுரம், தென்மயிலை என்னும்பெயர்களும் உள்ளன.

**தலப்பெயர்க் காரணம் :** சோழநாட்டில் காவிரிக்கரைத்தலங்கள் பல துறைப்பெயர் உடையனவாய் விளங்குகின்றன. காவிரிக்கரையில் மேற்கேவிளங்குவது கடம்பந்துறை. கிழக்கேவிளங்குவது மயிலாடுதுறை. இடையில் பராய்த்துறை குரங்காடுதுறை, ஆவடுதுறைமுதலி

யன உள்ளன. மயில்கள் ஆடும்துறையாக விளங்கியதால் இத்தலம் மயிலாடுதுறை எனப்பெற்றது. தேவாரத்தில் மயிலாடுதுறை என்றே வழங்கப்படுகின்றது. அம்பிகை மயிலுருவம்கொண்டுபூசித்தகாரணத்தால் இத்தலம் மயிலாடுதுறை எனப் பெற்றதென்றும், அப்பெயரே வடமொழியில் கௌரிமாயூரம் எனவும் மாயூரம் எனவும் வழங்கப் பெற்ற தென்றும் தல புராணம் கூறுகிறது. இத்தலத்துப் பெருமானை கௌரி, இந்திரன், பிரமன், பிரகஸ்பதி, அகத்தியர், நாதசர்மா, அவர் மனைவி அனவித்தை, திலீபன், சப்தமாதர்கள் முதலியோர் வழிபட்டுள்ளனர்.

**கோயிலமைப்பு :** காவிரிக்கரையிலிருந்துதெற்கே $\frac{1}{4}$ கி. மீ. தூரத்தில் கோயில் உள்ளது. சுவாமி அம்பாள் கோயில்கள் இரண்டும் கிழக்கு நோக்கி உள்ளன. 164 அடி உயரமுள்ள ஒன்பது நிலைக் கோபுரம் கோயிலுக்கு அழகு செய்கிறது. மூன்று பிராகாரங்கள் உள்ளன. இராஜகோபுரக் குடவறையில் முனீஸ்வரர் விளங்குகிறார். முதற்பிராகாரத்தில் ஆதிமாயூரநாதர்கோயிலும் தலமரமும் உள்ளன. இரண்டாம் கோபுரத்தைக்கடந்து உள்ளே சென்றதும் விநாயகர் கொடிமரம் நந்தி பலிபீடங்கள் உள்ள முன்மண்டபத்தைக்காணலாம். சந்நிதியின் இருபுறங்களிலும் விநாயகரும் ஆறுமுகப்பெருமானும் விளங்குகின்றனர்.

தெற்குப் பிராகாரத்தில் தருமையாதீனம்குமரக்கட்டளை அலுவலகமும் வடக்குப் பிராகாரத்தில் திருவாவடுதுறை ஆதீனம் தேவஸ்தான அலுவலகமும் உள்ளன. இக்கோயில் நாட்டுக்கோட்டை நகரத்தார்களில் திரு அள. வீ. பெ. வீரப்பசெட்டியார் அவர்களால் "பெரும் பொருட்செலவில் மிக்கவேலைப்பாடுகளுடன் கருங்கல் திருப்பணியாகச் செய்யப்பெற்றுள்ளது. அலுவலகத்தின் அருகில் களஞ்சிய விநாயகர் நாதசர்மா கோயில்கள் உள்ளன.

மூன்றும் கோபுரத்தைக் கடந்து உள்ளே சென்றதும் முதற்பிராகாரம். கோபுரவாயிலில் அதிகார நந்திதேவர் விளங்குகின்றார். கிழக்குப் பிராகாரத்தில் சூரிய சந்திரர்களும் தெற்குப்பிராகாரத்தில் மயிலம்மன் சமயாசாரியர் சப்தமாதர்கள் அறுபத்துமூவர் சகஸ்ரலிங்கமூர்த்திகள் உள்ளனர். மேற்குப்பிராகாரத்தில் சோமாஸ்கந்தர் மகாலக்ஷ்மி சிவலிங்க மூர்த்திகள் ஆகியோரும், வடக்குப்பிராகாரத்தில் சட்டைநாதர் நடராசர் ஆகியோரும், கிழக்கே நவக்கிரகங்களும் உள்ளனர்.

சுவாமி கோயிலின் பின்னால் முருகப்பெருமான் வள்ளிதெய்வயானையுடன் விளங்கும் குமரகோயில் தருமையாதீனத்துக்குச்

சொந்தமானது. முருகன்சந்நிதிக்கு முன்னல் அகத்திய விநாயகர் கோயில் விளங்குகின்றது. சுவாமிகோயில் கர்ப்பக்கிருகக்கோட்டங் களில் தெற்கே விநாயகர் தக்ஷிணுமூர்த்தி நடராசா, மேற்கே இலிங்கோற்பவர், வடக்கே பிர்மா துர்க்கை ஆகியோர் உள்ளனர். சுவாமி சந்நிதியில் பஞ்சமூர்த்திகள் விளங்குகின்றனர். சுவாமி சந்நிதி பெருஞ்சிறப்போடு விளங்குகிறது. வாயிலில் கம்பீரமான துவாரபாலகர் திருவுருவங்கள் உள்ளன. அருள்மிகு மாயூரநாதர் நம் உள்ளங்களை ஈர்த்தாட் கொள்ளும் நிலையில் விளங்குகின்ருர்.

நிலைமை சொல்லுநெஞ் சேதவம் என்செய்தாய்
கலைக ளாயவல் லான்கயி லாயநன்
மலையன் மாமயி லாடு துறையன் நம்
தலையின் மேலும் மனத்துளும் தங்கவே.

என்ற திருப்பாடலை ஓதி நாமும் நம்தவத்தை வியந்து அம்பிகை கோயிலுக்குச் செல்லலாம். அருள்மிகு அபயாம்பிகை கோயில் சுவாமி கோயிலின் இடப்பாகத்தே, தனிக்கோயிலாக விளங்குகின்றது. சலவைக்கல் திருப்பணி அபயாம்பாள் சந்நிதியின் இடப்பாகத்தில் அனவித்தியாம்பிகை கோயில் உள்ளது.

**மூர்த்திகள் :** இறைவன் திருப்பெயர் அருள்மிகு மாயூரநாதர், இறைவி திருப்பெயர் அருள்மிகு அபயாம்பிகை என்பதாகும். தேவாரத்தில் மயிலாடுதுறை அரன் எனவும் அஞ்சொலாள் எனவும் சுவாமி அம்பாள் பெயர்கள் குறிக்கப்படுகின்றன. அம்பிகை மயிலு ருவம் கொண்ட மயிலம்மன் திருவுருவம் தரிசிக்கத்தக்கது. ஐப்பசிப் பெருவிழாவில் மயிலம்மன் பூஜை ஐதிக விழாவாக நிகழ்கிறது.

**தீர்த்தம் :** இடபதீர்த்தம் (காவிரித்துறை), பிரமதீர்த்தம், அன வித்யாசரஸ் முதலியன. **தலமரம் :** மாமரம்.

## புராண வரலாறுகள்

**அம்பிகை மயிலுருவாய் இறைவனைப் பூசித்தது :** சிவபெருமானை மதியாது தக்கன் யாகம் செய்யத் தொடங்கினன். உமையம்மை சிவபெருமான் சொல்லைக்கேளாது தந்தை செய்யும் வேள்விக்குச் சென்ருள். அங்கு தக்கன் தன்னை அவமதித்ததோடு அவன் கூறிய சிவநிந்தனை உரைகளையும்கேட்டு உமையம்மை சினம்கொண்டாள். உலகமே நடுங்கியது. அப்போது ஓர் மரத்தின் கிளையிலிருந்த மயில் உமையம்மையைச் சரணுக அடைந்தது. அம்மை மயிலுக்குத் தோகாய் அஞ்சலை எனக் கூறி அபயம் அருளினள். சிவபெருமான் வீரபத்திரரை ஏவி, தக்கன் வேள்வியை அழிக்குமாறுசெய்தார்.

மயிலுக்கு அபயம் அளித்த அம்மையை நோக்கி மயிலுருவாய்த் தம்மை வழிபட்டு அருள் நலம் பெறுமாறு பணித்தருளினர். தாமும் மயிலாகத் தோன்றித் துணையிருப்போம் என்று அருளினர். அம்மை பெண் மயிலானள். இறைவன் அம்மையோடு ஆண் மயிலாகத் தோன்றித் தோகையை விரித்தாடி மகிழ்ந்தான். அம்பிகை மயிலுரு வாய்ப் பிரமதீர்த்தத்தில் நீராடி இறைவனை வழிபட்டு வந்தாள். இறைவன் அருட்காட்சிதந்து அம்பிகையை ஏற்றருளினர். அம்பிகை மயிலுருவாய் வழிபட்டதால் இத்தலம் மயிலாடுதுறை எனப்பெற்றது. ஐப்பசி விழாவில் அம்பிகை மயிலுருவாய் வழிபட்ட ஐதிக விழா நடைபெறுகிறது.

**இடபதீர்த்தம் :** உமையம்மை மயிலுருக் கொண்டு இத்தலத்தில் இருக்குங்கால் இறைவன் உலகைச் சுற்றிப்பார்க்க எண்ணி இடபத்தில் ஏறிப் புறப்பட்டார். ஏனைய தேவர்களும் தத்தம் ஊர்திகளில் உடன் புறப்பட்டனர். இடபம் மிக்க செருக்கோடு முந்திச் சென்றது. இடபத்தின் செருக்கை அடக்க எண்ணிய பெருமான், கால்விரலால் சிறிது இடபத்தை ஊன்றினர். இடபம் ஓலமிட்டுக்கொண்டு பாதாள உலகம் சென்றது. இறைவன் திருவுளமிரங்கி மாயூரநகரில் காவிரி யின் நடுவே யிருந்து நீராடு வோர்க்கு வேண்டும் வரம் அருளப் பணித்துச் சென்ருர் இடபம் தனக்கு உண்மை ஞானம் உணர்த்து மாறுவேண்டிற்று. இறைவன் ஐப்பசி அமாவாசையன்று உத்தர மாயூரம் எனப்படும் வள்ளலார்கோயிலில் தென்முகப்பரமனய் வீற்றிருந்து இடபதேவர்க்கு உண்மைஞானம் அருளும்மூர்த்தியாக விளங்குதலை இன்றும் நாம் காணலாம்.

**நாற்றிசை வள்ளல்:** மாயூரநாதர் நாற்றிசைகளிலும் நான்கு வள்ளல்கள் வீற்றிருக்க. நடுநாயகமான வள்ளலாக விளங்கி வரு கின்ருர். அப்பரடிகள் மாயூரநாதரை மயிலாடுதுறைஉறை வள்ளல் எனக் குறிப்பிடுதலைக் காணலாம். மாயூரத்திற்குக் கிழக்கே விளநகரில் விளங்கும் இறைவன் துறைகாட்டும் வள்ளல் எனப் படுவர். மேற்கே மூவலூரில் விளங்கும் இறைவன் வழிகாட்டும் வள்ளல் ஆவார். தெற்கே பெருஞ்சேரியில் உள்ள இறைவன் வாக்குக் காட்டும் வள்ளல் எனப்படுவார் வடக்கே உத்தர மாயூரத்தில் விளங்கும் இறைவன் கைகாட்டும் வள்ளல் எனப்படுவார். இவ்வாறு நாற்றிசைகளிலும் நான்கு வள்ளல்கள் விளங்கிட நடுநாயகமாக மாயூரநாதர் விளங்கிவருகிருர்.

**சப்தமாதர்கள் வழிபாடு:** பிராமி முதலான ஏழு மாதர்களும் இறைவனைப் பூசித்து வழிபட விரும்பினர். பெருமான் மாயூரத்தில் இடபதீர்த்தத்தில் மூழ்கி அதனைச் சுற்றியுள்ள ஏழு தலங்களிலும்

எம்மை வழிபடுக என்றருளினர். அவ்வாறே சப்தமாதர்கள் மாயூரத்தைச் சூழவுள்ள தலங்களில் இறைவனை வழிபட்டு அருள் பெற்றனர். மாயூரம் நகராட்சி அலுவலகத்துக்கு முன்னே சப்த மாதர் கோயில் உள்ளது.

**பிராமி** மாயூரம் பல்லவராயப்பேட்டைக்கு இடையிலுள்ள சுயம்புநாதர் கோயிலிலுள்ள தான்தோன்றீசரை வழிபட்டாள். **மாகேஸ்வரி** கருங்குயில்நாதன் பேட்டையில் உள்ள சக்திபுரீசுவரரை வழிபட்டு அருள்பெற்றாள். **கௌமாரி** கஞ்சாறூர் எனப்படும் ஆனந்ததாண்டவபுரத்து இறைவனை வழிபட்டு அருள்பெற்றாள். **வைணவி** வள்ளலார்கோயில்-தருமபுரத்திற்கு இடையிலுள்ள பசுபதி அக்ரகாரத்திலுள்ள பசுபதீஸ்வரர் கோயில் இறைவனையும் **வாராகி** வழுவூர் இறைவனையும், **இந்திராணி** தருமபுரத்தில் விளங்கும் தருமபுரீசுவரரையும் **சாமுண்டி** உத்தரமாயூரம் எனப்படும் வள்ளலார் கோயிலில் உள்ள இறைவனையும் வழிபட்டு அருள்பெற்றனர்.

**பஞ்ச விசுவநாதர் :** கங்கையே நீராடித் தூய்மை பெறுவதால் கங்கையிற் புனிதமான காவிரித்துறையில் இத்தலத்தில் ஐந்து விசுவநாதர் கோயில்கள் உள்ளன.

(1) துலாக்கட்டத்தின் தென்பால் விளங்கும் தருமையாதீனம் ஸ்ரீகாசி விசுவநாதர் திருக்கோயில்.

(2) பாலக்கரையில் விளங்கும் ஸ்ரீ விசுவநாதர் கோயில்.

(3) காவிரிக்கரையில் வள்ளலார் தீர்த்தமண்டபத்திற்கு அருகில்விளங்கும் ஸ்ரீ விசுவநாதர் கோயில்.

(4) திம்மய்யநாயக்கன் படித்துறையில் உள்ளகோயில்.

(5) மாயூரம் வடக்குவீதிக்கும், கோயில் வடக்கு மடவிளாகத்துக்கும் இடையிலுள்ள கோயில்.

**சூழவுள்ள தலங்கள் :** மேற்கே மூவலூர் சித்தர்க்காடு ஆகிய தலங்களும் ஐயாறப்பர் கோயிலும், வடக்கே கஞ்சாறூர் எனப்படும் ஆனந்ததாண்டவபுரம் நீடூர் வள்ளலார்கோயில் திருவழுந்தூர் ஆகியனவும், தெற்கே வழுவூர் பெருஞ்சேரி ஆகியனவும், கிழக்கே தருமபுரம் விளநகர் ஆகியனவும் உள்ளன.

**இலக்கியம் :** திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் அருளிய தேவாரத் திருப்பதிகங்கள் மூன்று இத்தலத்திற்குள்ளன. மற்றும் அப்பர் அருளிய (6-51-1, 6-59-4, 6-71-11, 6-81-4,) ஆறும்

திருமுறைப் பாடல்களும் உள்ளன. அருணகிரிநாதர் இத்தலத்து முருகப்பெருமான்மீது அருளிய திருப்புகழ்ப் பாடல்கள் மூன்று உள்ளன. மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் பாடிய தலபுராணம், மற்றும் மயிலைத் திரிபந்தாதியும் அபயாம்பிகை மாலை அபயாம்பிகை அந்தாதி முதலியனவும் உள்ளன. கந்தபுராணம் வழிநடைப்படலத்தில் முருகன் இத்தலத்தை வழிபட்டுச் சென்றதாகக் கூறப்படுகிறது. நல்லத்துக்குடி கிருஷ்ணய்யர் இயற்றிய அபயாம்பிகை சதகம் உள்ளது.

**கல்வெட்டுக்கள் :** இத்தலத்தைப்பற்றிப் படியெடுக்கப் பட்டதாகப் பதினாறு கல்வெட்டுக்கள் உள்ளன. பணிசெய்த அரசர்கள் குலோத்துங்கன் I. இராசாதிராசன் II. குலோத்துங்கன் III. இராஜராஜன் III. சடையவர்மன் சுந்தரபாண்டியன் இவர்களாவர். இக்கல்வெட்டுக்களால் நிலம் பொன் அளிக்கப்பெற்றமை அறியப்படுகின்றன. இறைவன் திருமயிலாடுதுறை உடையார் எனவும் குறிக்கப் பெறுவர். இக்கல்வெட்டுகளில் ஐந்துபோக ஏனையவை ஐயாறப்பரைப் பற்றியன. இத்தலத்து ஐயாறப்பர்கோயில் தனியே மாயூரநாதர் கோயிலுக்குத் தென்மேற்கில் உள்ளது. இந்த ஐயாறப்பர் ஜயங்கொண்ட சோழவளநாட்டுத் திருவழுந்தூர்நாட்டு குலோத்துங்க சோழன் குற்றாலமாகிய திருவையாறுடையார் எனக்குறிக்கப்பெறுவர். இத்தலத்து விக்கிரமசோழன் திருமடம் என ஒன்றிருப்பதாகக் குறிக்கப்பெறுகின்றது. முதற்குலோத்துங்கன் சுங்கம்தவிர்த்தசோழன் எனப்படுகிறான். ஐயாறப்பர்கோயிலில் ஐயாறப்பரைப் பிரதிஷ்டை செய்ததுபோன்ற சிறந்த நிகழ்ச்சிகள் அறிவிக்கப்படுகின்றன.

அஞ்சொண் புலனும் மவைசெற்ற
மஞ்சன் மயிலா டுதுறையை
நெஞ்சொன் றிநினைந் தெழுவார்மேல்
துஞ்சும் பிணியா யினதானே.

தொண்டர் இசைபா டியுங்கூடிக்
கண்டு துதிசெய் பவனூராம்
பண்டும் பலவே தியரோத
வண்டார் மயிலா டுதுறையே. — திருஞானசம்பந்தர்.

அண்டர் வாழ்வும் அமரர் இருக்கையும்
கண்டு வீற்றிருக் குங்கருத் தொன்றிலோம்
வண்டு சேர்மயி லாடு துறையரன்
தொண்டர் பாதங்கள் சூடித் துதையிலே.

— திருநாவுக்கரசர்.

## 2. திருவிளநகர்

மாயூரத்துச்குக் கிழக்கே 7 கி. மீ. தூரத்தில் பொறையாறு செல்லும் பேருந்துச் சாலையில் இத்தலம் உள்ளது. மன்னன் பந்தல் புகைவண்டி நிலயத்திலிருந்து வடகிழக்கே 1½ கி. மீ. தூரத்தில் இருக்கிறது.

**பெயர்க்காரணம் :** விள ( விளா ) மரங்கள் அடர்ந்த இடமாக இருந்ததால் இத்தலம் விளநகராயிற்று விழல் - ஒருவகைப் புல். இப்புல் மிகுந்த இவ்வூர் விழல்நகர் என வழங்கப்பட்டு விளநகர் எனத் திரிந்தது என்றும் கூறலாம். சுவாமிக்கு விழற்காட்டு இறைவர் எனவும் பெயருண்டு. கபித்தன் என்னும் அசுரன் பிரமகத்திதோஷம் நீங்கி வழிபாடுசெய்தான் ஆகையால் அவன் பெயரால் ( கபித்தம் - விளா ) இத்தலம் விளநகர் எனப்பெற்றதென்று தல மான்மியம் கூறுகிறது.

**கோயிலமைப்பு :** தருமையாதீனத்திற்குச் சொந்தமான இத் திருக்கோயில் சீருந்திருவும் பொலியத் திகழ்ந்து வருகிறது. கோயில் ஊரின் நடுவே கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. ஐந்துநிலைக்கோபுரம் கோயிலுக்கு அழகு செய்கிறது. இரண்டு பிராகாரங்கள். இராஜ கோபுரத்தை அடுத்து ஆஸ்தான மண்டபமும், அலுவலகமும் உள்ளன. இரண்டாம் கோபுரவாயிலின் இருபுறங்களிலும் விநாயகர் விளங்குகிறார். முதற்பிராகாரத்தின் மேல்புறத்தில் விநாயகர் சோமாஸ் கந்தர் ஆறுமுகர் கஜலட்சுமி ஆகியோர் விளங்குகின்றனர். வடக்கே நடராஜர் கிழக்கே நவக்கிரகங்கள் சூரியன் பைரவர் ஆகியோர் எழுந் தருளியுள்ளனர். கர்ப்பக்கிருக கோஷ்டங்களில் தெற்கே தக்ஷிணு மூர்த்தி, மேற்கே திருமால், வடக்கே பிர்மா துர்க்கை ஆகியோர் உள்ளனர். அம்பாள்கோயில் தெற்குநோக்கியுள்ளது. கருவாழக்கரை திரு. மகாதேவசெட்டியார் மகன் சூரிசெட்டியார் குடும்பத்தினர் இத்திருக்கோயிலைத் திருப்பணி செய்துள்ளனர். அண்மையில் தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்கள் அருளாட்சிக் காலத்தில் திருப்பணிகள் செய்வித்து 2—2—59 இல் மகாகும்பாபி ஷேகம் நிகழ்த்தப்பெற்றுள்ளது.

**மூர்த்திகள் :** இறைவன் திருப்பெயர் அருள்மிகு துறைகாட்டும் வள்ளலார். அம்பிகை திருப்பெயர் அருள்மிகு வேயுறு தோளியம்மை. காம்பன தோளி எனவும் அம்பிகை வழங்கப்படுகிறார்.

**தீர்த்தம் :** காவிரி. மெய்ஞ்ஞான தீர்த்தம் கோயிலின் மேல்பால் உள்ளது.

**புராண வரலாறு :** அருள்வித்தன் என்ஞெருரு அந்தணன் நாள்தோறும் இறைவனுக்கு அருச்சனைக்கு ஆகும் மலர்களை எடுத்துக் கொடுத்துவந்தான். என்ன இடையூறு நேரினும் அப்பணியிலிருந்து இவன் தவறுவதே இல்லை. இவனை உலகிற்கு அறிவிக்கவும், உலகத்தாரும் சரியைத்தொண்டில் தளராதுநின்று ஈடேறவும் திருவுளங் கொண்டபெருமான், ஒருநாள் விடியற்காலையில் வண்டுதாமலரை நிரம்பப் பறித்துக்கொண்டு ஆற்ருேடு வரும்பொழுது ஆறுபெருகிவரத் திருவுள்ளம்பாலித்தார். ஆற்றுநீர் அரையளவாய், மார்பளவாய், கழுத்தளவாய், வாயளவாய்ப் பெருகிற்று.

அப்போது அந்தணன் இருகையால் நீந்தமுடியாமலும், பூக் கூடையை விட்டுவிட மனமில்லாமலும் திருப்பள்ளி எழுச்சிக்கே பயன்படும் பூவைக் காலந்தாழ்த்துக் கொண்டுசெல்லலாகாதென்ற எண்ணத்தாலும் விரைந்து வந்துகொண்டிருந்தான். இவனுடைய அன்பையும் உறுதியையும்கண்ட இறைவன் கருணைகூர்ந்து துறை காட்டிக் கரையேறவிட்டார். அதனுல் துறைகாட்டும் வள்ளல் என்ற பெயரைத்தாங்கினுர்.

பின்ஞெருகால் திருஞானசம்பந்தப்பெருமான் கடைமுடி முதல் பலதலங்களை வணங்கிக்கொண்டு மாயூரநாதரைவணங்க வருகின்றவர்கள் ஆற்றைக்கடக்க வழிதெரியாமையால் என்ன செய்வதென்று இரங்கியருளினுர்கள். ஆற்றுநீரும் கரைபுரண்டு வழிதெரியாது பரந்தோடிற்று. அப்போது திருஞானசம்பந்தப்பெருமான் இங்கு துறை காட்டுவோர் யாரேனும் உளரோ என்று திருவுளத்துக்கொண்டார். அப்போது ஒரு வேடன் தோன்றி, யாம் அழைத்துப்போகின்ருேம் என்று ஆற்றில் இறங்கினுன். பரந்துபட்ட காவிரி வெள்ளம் பாலருவாயர் பாதத்தளவேயாயிற்று. தென்கரையேறிய திருஞானசம்பந்தர் துறைகாட்டிய துணையாகிய வேடனைத் திரும்பி நோக்கினுர். காணவில்லை. அப்போது, துறைகாட்டும்வள்ளலோ என்றிறைஞ்சியேத்தினுர். இதனை ஞானசம்பந்தர் தேவாரம் நன்கு விளக்கும். அது :—

“ சொற்றரு மறைபாடினுர் சுடர்விடுஞ் சடைமுடியினுர்
கற்றருவ் வடங்கையினுர் காவிரித்துறை காட்டினுர்
மற்றரு திரள்தோளினுர் மாசில்வெண் பொடிப்பூசினுர்
விற்றிருமணி மிடறினுர் மேயதுவ் விளநகரதே. ”

**கல்வெட்டுக்கள் :** இத்தலத்திற்கு மூன்று கல்வெட்டுக்கள் உள்ளன. அதில் நகர் திருவிளநகர் என்று குறிக்கப்பெறுகின்றது. இறைவன் துறைகாட்டுந்தம்பிரானுர், துறைகாட்டுவான் என்று

அழைக்கப்படுகின்றார். கல்வெட்டுக்களில் மிகப்பழமையானது உத்தம சோழன் காலத்ததாகும். திருவிளநகர்கோயில் அர்த்தயாம பூசைக்காக உத்தமசோழன் பட்டமகிஷியான உத்தமச்சுரபியாள், நெறியுடை சோழப் பேராற்றின் கரையில் நிலமளித்தாள்; இது பரகேசரிவர்மன் ஆட்சி ஐந்தில் நடந்தது. இதனால் இத்தலத்தின் தொன்மை நன்கு விளங்கும்.

தஞ்சைநாயக்க வம்சத்தைச் சேர்ந்த அச்சுதப்பநாயக்கர் காலத்தில் ஆறுபாதியைச் சேர்ந்த விளநகர் துறைகாட்டும் வள்ளலார் கோயில்கர்ப்பக்கிருகம், அர்த்தமண்டபம், மகாமண்டபம் இவைகள் திருப்பணி செய்விக்கப்பெற்றன. திருப்பணி நிகழ்த்தியவர் கோயில் பணத்தைக்கொண்டும், பல சிவநேசர்களுடைய உதவிகளைக் கொண்டும் செய்வித்தனர். செய்வித்த பெருந்தகை தன்னுடைய பெயரைக் குறிப்பிடாது வழியடிமைஎன்று குறிப்பிட்டுக்கொள்கிறார். முன்பக்கத்து மண்டபத்துத் தூணொன்றிலுள்ள கல்வெட்டில் கீலகவூ ஆடிமீ 15உ என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. தீக்ஷிதர் ஒருவர் நிலமளித்தசெய்தியைக் குறிப்பிடுகிறது. (163 164, 165 of 1925.)

ஒளிரிளம் பிறை சென்னிமே லுடையர்கோவண வாடையர்
குளிரிளம்மழை தவழ்பொழிற் கோலநீர்மல்கு காவிரி
நளிரிளம்புனல் வார்துறை நங்கைகங்கையை நண்ணினர்
மிளிரிளம்பொறி யரவினர் மேயதுவிள நகரதே.

அக்கரவ்வணி கலனென வதனொடார்த்ததொ ராமைபூண்(டு)
உக்கவர்சுடு நீறணிந் தொளிமல்குபுனற் காவிரிப்
புக்கவர்துயர் கெடுகெனப் பூசுவெண்பொடி மேவிய
மிக்கவர்வழி பாடுசெய் விளநகரவர் மேயதே.

வாளிசேரடங் கார்மதில் தொலையநூறிய வம்பின்வேய்த்
தோளிபாக மமர்ந்தவ ருயர்ந்ததொல்கடல் நஞ்சுடன்
காளமல்கிய கண்டத்தச் கதிர்விரிசுடர் முடியினர்
மீளியேறுகந் தேறினர் மேயதுவிள நகரதே.

மென்சிறைவண் டியாழ்முரல் விளநகர்த்துறை மேவிய
நன்பிறைநுத லண்ணலைச் சண்பைஞானசம் பந்தன்சீர்
இன்புறுதமி ழாற்சொன்ன ஏத்துவார்வினை நீங்கிப்போய்த்
துன்புறுதுய ரம்மிலர் தூநெறிபெறு வார்களே.

— திருஞானசம்பந்தர்.

# தொகைப்பாட்டு

தருமையாதீனப்புலவர்

**டாக்டர். திரு. சொ. சிங்காரவேலன் எம். ஏ., பிஎச். டி.**

( மலர் 38, இதழ் 9, பக்கம் 370 இன் தொடர்ச்சி )

**பதினாறு பேறுகள் :**

வாழ்வில் பெறத்தக்க பேறுகள் பதினாறு என்பது வழக்கு, அவற்றைத் தொகுத்துச் சுட்டும் சில பாடல்களும் அன்பர்கள் நினைவை விட்டு அகலாதவை. அபிராமிபட்டர் பாடியருளிய அபிராமி பதிகத்தில் வரும் பாடற் பகுதி இவற்றுள் ஒன்றாகும் ;

" சகலசெல் வங்களும்தரும் இமயகிரிராச
  தனயைமா தேவி நின்னைச்
சத்யமாய் நித்ய முள்ளத்தில் துதிக்கும்உத்
  தமருக்கு இரங்கி மிகவும்
அகிலமதில் நோயின்மை, கல்வி, தனம், தான்யம்,
  அழகு, புகழ், பெருமை, இளமை,
அறிவு, சந்தானம், வலி, துணிவு, வாழ்நாள், வெற்றி,
  ஆகுநல் லூழ் நுகர்ச்சி
தொகைதரும் பதினாறு பேறும் தந்தருளிநீ
  சுகானந்த வாழ்வளிப்பாய். "

பதினாறு பேறுகளைத்தொகுத்துக் காளமேகப்புலவர் பாடும்பாட்டு இது.

துதி, வாணி, வீரம், விசயம், சந்தானம், துணிவு, தனம்,
அதிதானியம், சௌபாக்கியம், போகம் — அறி, வழகு
புதிதாம் பெருமை, அறம், குலம், நோவகல் பூண் வயது
பதினாறு பேறும் தருவாய் மதுரைப் பராபரனே."

**வைணவ ஆழ்வார்கள் :**

வைணவ இலக்கியத் தோத்திரச் செல்வங்களாகிய நாலாயிரத் திவ்விய பிரபந்தத்தை அருளிய பன்னிரண்டு ஆழ்வார்களின் திருப் பெயர்களைத் தொகுத்துரைக்கும் வேதாந்த தேசிகனின் தொகைப் பாட்டு பின்வருவது :

" வையகம் எண் பொய்கை, பூதம், பேய் ஆழ்வார்,
மழிசையர்கோன், மகிழ்மாறன், மதுரகவிகள்
பொய்யில்புகழ்க் கோழியர்கோன், விட்டுசித்தன்,
பூங்கோதை, தொண்டரடிப்பொடி, பாண் ஆழ்வார்,

ஐயன் அருள் கலியன், எதிராசர் தம்மோடு
ஆறிருவர், ஓர் ஒருவர் அவர் தாம் செய்த
துய்யதமிழ் இருபத்து நான்கில், பாட்டின்
தொகை நாலாயிரமும் அடியோங்கள் வாழ்வே''.

நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதியில் ஒரு வெண்பா பன்னிரண்டு ஆழ்வார்களின் பெயர்களைத் தொகுத்து உணர்த்துகின்றது;

"பொய்கை, பூதன், பேயார், பொன் மழிசைக்கோன், மாறன்,
செய்ய மதுரகவி, சேரர்கோன் — வையகமெண்
பட்டர்பிரான், கோதை, தொண்டர் பாதப்பொடி, பாணன்,
கட்ட விழ்தார் வாட்கலியன். காப்பு.''

வைணவத் தலங்கள் நூற்றெட்டை நினைவுபடுத்தும் பாட்டு ஒன்றை வைணவர்கள் மறக்கமாட்டார்கள்;

"ஈரிருபதாம் சோழம் ஈரொன்பதாம் பாண்டி
ஓர்பதின் மூன்றுமலை நாடோரிரண்டாம் — சீர்நடுநாடு
ஆறோ டீரெட்டு தொண்டை யவ்வடகாறுரிரண்டு
கூறுதிரு நாடொன்றாக் கொள்.''

**சங்கப் புலவர்கள் :**

முச்சங்கத்துப் புலவர்கள், அவர்கள் இயற்றிய நூல்கள் ஆகிய வற்றைத் தொகுத்து நினைவில் இருத்தவேண்டுமா? காளமேகப் புலவருடைய ஒரு வெண்பா இப்பணியைச் செய்துவிட்டது.

"நூலாநா லாயிர நா நூற்றுநாற்பத் தொன்பான்
பாலாநா னூற்றுநாற்பத் தொன்பான் — மேலாநாற்
பத்தொன்பான் சங்கம் அறுபத்துநா லாட லுக்கும்
கர்த்தன் மதுரைச் சொக்கன்''

**பத்தவதாரங்கள் :**

திருமாலின் பத்து அவதாரங்களைத் தொகுத்த தொகைப்பாட்டு ஒன்றைக் காளமேகப் புலவர் தனிப்பாடல்களிற் காண்கின்றோம்.

"மெச்சுபுகழ் வேங்கடவா வெண்பாவிற் பாதியில்என்
இச்சையிலுன் சென்மம் எடுத்தவா — மச்சா, கூர்
மா, கோலா, சிங்கா, வா மா, ராமா, ராமா, ரா
மா, கோபா லா, மா,வா வாய்.''

**பன்னிரண்டு இராசிகள் :**

இராசிகள் பன்னிரண்டின் பெயர்களையும் நினைவிற்கொள்ள வேண்டுமா ? காளமேகப் புலவருடைய தொகைப்பாட்டொன்று இந்தப் பணியை எழில்பெறச் செய்துள்ளது;

" பகருங்கால் மேடம், இடபம், மிது னங், கற்க
டகம், சிங்கம், கன்னி, துலாம், விர்ச் — சிகம்,த
நுசு, மகரம், கும்பம், மீனம்பன் னிரண்டும்
வசையறும் இராசி வளம்.''

**தொகைப்பாட்டிலக்கியங்கள் :**

பழந்தமிழ் நூல்களில், பதினெண் கீழ்க்கணக்குத் தொகுப்பில், நான்மணிக் கடிகை, இன்னாநாற்பது, இனியவை நாற்பது, திரிகடுகம், சிறுபஞ்சமூலம் ஆகியவை தொகைப் பாட்டிலக்கியங்களாகவே உள்ளன. இவற்றுள், தொகுக்கப்பட்ட செய்திகள் வாழ்விற்கேற்ற நன்னெறி உண்மைகளாகவே அமைந்துள்ளன.

**எட்டுத் தொகைநூல்கள் :**

எட்டுத்தொகை நூல்கள் எவை எவை என்று தொகுத்துச் சுட்டு கின்ற பழம்பாடலை அறியாதார் யார் ?

" நற்றிணை, நல்ல குறுந்தொகை, ஐங்குறுநூறு
ஒத்தபதிற்றுப்பத்து, ஓங்கு பரிபாடல் —
கற்றறிந்தோர் ஏத்தும் கலியோடு, அகம், புறம் என்று
இத்திறத்த எட்டுத்தொகை."

**பத்துப்பாட்டு :**

பத்துப்பாட்டுத் தொகுப்பை அறிமுகப்படுத்தும் பாடல் இது :

" முருகு, பொருநாறு, பாணிரண்டு, முல்லை,
பெருகு வளமதுரைக் காஞ்சி — மருவினிய
கோல நெடுநல்வாடை. கோல்குறிஞ்சி, பட்டினப்
பாலை, கடாத் தொடும் பத்து.''

**பதினெண்கீழ்க் கணக்கு :**

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களைத் தொகுத்துச் சுட்டும் பாடல் ஒன்றும் தமிழ் பயில்லோர் நன்கு உணர்ந்ததே :

" நாலடி, நான்மணி, நானாற்ப, தைந்திணை, முப்
பால், கடுகம், கோவை, பழமொழி, மாமூலம்,
இன்னிலைய காஞ்சியோ, டேலாதி என்பவே,
கைந்நிலைய வாம்கீழ்க் கணக்கு."

**எண்வகை மணங்கள் :**

தமிழ்நெறி விளக்கத்தில், எண்வகை மணங்கள் தொகைப் படுத்திப் பின்வருமாறு உரைக்கப்பட்டுள்ளன.

" அறநிலை, ஒப்பே, பொருள்கோள், தெய்வம்
யாழோர் கூட்டம், அரும்பொருள் வினையே,
இராக்கதம், பேய்நிலை, என்றிக் கூறிய
மறையோர் மன்றல் எட்டிவை; அவற்றுள்
துறையமை நல்யாழ்த் துணைமையோர் இயல்பதன்
பொருண்மை என்மனார் புலமை யோரே."

**திருக்குறள் பற்றியவை :**

திருக்குறள் தமிழ்த்தலைமைத் திருநூல். அதன் இயற்பாகுபாடு களை நினைவுகொள்ளத் தொடித்தலை விழுத்தண்டினார் பாடிய திருவள்ளுவமாலைப் பாட்டொன்று துணை செய்யும் :

" அறநான்கு அறிபொருள் ஏழொன்று காமத்
திறமூன் றெனப் பகுதிசெய்து — பெறலரிய
நாலுமொழிந்த பெரு நாவலரே நன்குணர்வார்
போலு மொழிந்த பொருள்."

திருக்குறளின் அதிகாரங்களைப் பால்வழிப் பிரித்து நினைவிற் கொள்ளச் சிறுமேதாவியார் பாட்டு நற்றுணையாக உள்ளது.

" வீடொன்று பாயிர நான்கு விளங்கும் அறம்
நாடிய முப்பத்து மூன்று ஒன்றாம் — கூடுபொருள்
என்னில் எழுபது இருபத்திற் றைந்தின்பம்
வள்ளுவர் சொன்ன வகை."

இவ்வாறே அறத்துப்பால்அதிகாரங்களை எறிச்சலூர்மலாடனாரும், பொருட்பால் அதிகாரங்களைப் போக்கியாரும், காமத்துப்பால் அதிகாரங்களை மோசிகீரனாரும் அமைத்துப் பாடியுள்ள வெண்பாக்கள் திருவள்ளுவமாலையுள் திகழ்கின்றன.

**கலித்தொகை அமைப்பு:**

எட்டுத்தொகையுள் ஒன்றாகிய கலித்தொகையின் ஆசிரியர்களைத் தொகுத்துச் சுட்டும் அழகிய வெண்பா பின் வருமாறு!

" பெருங்கடுங்கோன் பாலை, குறிஞ்சி கபிலன்,
மருதனிள நாகன் மருதம், — அருஞ்சோழன்
நல்லுத் திரன் முல்லை, நல்லந்துவன் நெய்தல்.
கல்வி வலார் கண்டகலி,,

**பரிபாடற் பொருள்:**

பரிபாடல் என்ற சங்க நூலின் பாட்டுக்கள் உணர்த்தும் பொருள் பற்றிய பழம்பாடல் ஒன்று, எழுபது பாட்டையுடையது அந்நூல் என் றுணர்த்துகின்றது. (கிடைத்துள்ளன இருபத்திரண்டு மட்டுமே)

" திருமாற் கிருநான்கு, செவ்வேட்கு முப்பத்
தொருபாட்டுக் காடுகிழாட் கொன்று — மருவினிய
வையையிரு பத்தாறு மாமதுரை நான்கென்ப
செய்யபரிபாடற் றிறம்."

**அகத்தொகுப்பு அருமை:**

அகநானூற்றின் தொகுப்பு முறையின் அருமைப் பாட்டை எண்ணிஎண்ணி இன்புறுவதாக அமைந்தபழம்பாடல்கள் இரண்டை மறக்க இயலாது. கூர்ந்து நோக்கி, அவ்வமைப்பின் அருமையை உரைக்கும் பாட்டுக்கள் இவை :

" ஒன்றுமூன் றைந்தே ழொன்பான் பாலை;ஓதாது
நின்றவற்றின் நான்கு நெறி முல்லை — அன்றியே
ஆறும் மருதம்; அணிநெய்தல் ஐயிரண்டு;
கூறுதவை குறிஞ்சிக் கூற்று."

" பாலை வியமெல்லாம்; பத்தாம் பனிநெய்தல்;
நாலு நளிமுல்லை நாடுங்கால் — மேலையோர்
தேறும் இரண்டெட் டிவைகுறிஞ்சி; செந்தமிழின்
ஆறு மருதம் அகம்."

**தொகைப்பாட்டும் தொல்காப்பியமும் : 'நினைவுப்பேழை'**

இதுகாறும் காட்டப்பெற்றவை சில எடுத்துக்காட்டுக்களே; எண்ணற்ற பாட்டுக்கள் இத்தொகைப் பாட்டிற்கு இலக்கியமாகத் தமிழில் அமைந்துள்ளன. வழிநூலின் வகையினைக் கூறவந்த நம் தொல்காப்பியர்,

" தொகுத்தல், விரித்தல், தொகைவிரி, மொழிபெயர்த்து
அதர்ப்பட யாத்தலோடு அனைமரபினவே " (தொல் 1597)

என்று கூறியுள்ளார். முதலிற்குறித்த 'தொகுத்தல்' தனிநூலாகவே அமையும் என்பது அவர் கருத்து. நூலின் உத்திகளில் ஒன்றாக, 'தொகுத்துக்கூறல்' என்பதனையும் தொல்காப்பியர் குறித்துள்ளார். (தொல் 1610). இவ்வாறு தொகுத்துக் கூறும் பாட்டுக்கள் அல்லது அவற்றை உறுப்பாகக்கொண்ட தனிப் பனுவல்கள் 'சுருங்கக்கூறல்' என்ற அழகு 'பொதுத்தன்மையாக' விளங்க எழுந்துள்ளன என்று கூறலாம். பல்வேறு செய்திகளை வனப்புற அமைத்து வழங்கும் இத் தொகைப்பாட்டுக்கள் இவ்வகையில் 'நினைவுப்பேழை'களாகவிளங்கு கின்றன என்று கூறலாம்.

# தவராசர் குமரகுருபரர்

புலவர். திரு. மு. வைத்தியநாதன்

**நன்மக்கள் விருப்பம் :**

சைவசித்தாந்தச் செந்நெறிக்கு நாட்டில் நலிவு ஏற்பட்டகாலத்தி லெல்லாம் பல அறிஞர்கள் தோன்றி, அந்நெறியின் தாழ்வு நீக்கிய துண்டு.

பல அருளாளர்கள் இந்தத் தமிழ் மண்ணில் அவ்வப்போது வலம் வந்து சைவசமய உண்மைகளை உலகினர்க்கு உணர்த்தியிருக் கின்றனர்.

தமிழ்நாட்டில் பிற்காலத்தில் மெய்கண்ட தேவர் முதலிய சைவ சமயச் சான்றோர்கள் தோன்றி. அச்சமய தத்துவ உண்மைகளை விளக்கி மறைந்தபின், வேற்றுச் சமய வரவால் சைவ நன்னெறிக்குத் தாழ்வு ஏற்படத் தொடங்கியது.

17 ஆம் நூற்றுண்டளவில் தமிழகத்தில் நாயக்கர் அரசு சிறப் புடன் விளங்கியபோது, வைணவ சமயம் ஏற்றம் பெறலாயிற்று. ஏகான்ம வாதக் கொள்கையும் தலையெடுத்தது.

இச்சமயத்து, நாட்டில் பரவிய துருக்கர் சமயமும் அதன் கொள் கைகளும் மக்களை வெகு வேகமாக ஈர்க்கத் தொடங்கியது.

இந்தக் காலவெல்லையில் தமிழகத்திலுள்ள சைவ நன்மடங்களில் வாழ்ந்த துறவியர், தங்களை அடைந்தவர்களுக்கே சிவநெறியினை விளக்கி, அதன் சிறப்பினை உணரச் செய்துவந்தனர்.

நாட்டில் வாழ்ந்த சைவநன்மக்கள். தங்கள் சமயம் தாழ்வுற்று விளங்குவதை அறிந்து, தமக்கு ஒரு சமயத்தலைவர் தேவை என உணர்ந்து, ஆவலுடன் எதிர்பார்த்திருந்தனர்

**அருளாளர் குமரகுருபரர் :**

அவர்களின் ஆவல் நிறைவேறும் வகையில், அந்தக்கால எல்லை யில் தோன்றி நாடு முழுவதும் வலம் வந்து பெருமையடைந்தவர் குமரகுருபரர் என்னும் அருளாளர்.

சிவநெறி சிறந்ததுடன் அமையாமல், செந்தமிழும் செழிக்கத் தென்பாண்டி நாட்டில் தோன்றிக் கன்னியாகுமரிமுதல் இமயப் பனி மலைச்சாரல்வரை தம்புகழ் நிறுவிய சான்றோர் குமரகுருபரர்.

குமரகுருபரர் தம் நிறைமொழியறிவால் தென்னாட்டு நாயக்க மன்னர்களையும், வடபுலத்துத் துருக்க அரசரையும் வயப்படுத்தி, அவர்களைச் செந்நெறிப் படுத்தியவர்.

திருச்சியில் தம் புலமையும் சமயப்பிடிப்பும் அறியாது வந்து எதிர்வாது செய்த வைணவர்களைச் சிவநெறியின் மிகச்சிறந்த நெறி முறைகளை விளக்கி, அவர்தம் வினாக்களுக்குத் தக்காங்கு விடைகூறி வென்று விளங்கியவர்

தில்லையில் எழுந்தருளி யிருந்தபோது, இவர் திறம் அறியாது வந்து, எதிர்வாது செய்த ஏகான்ம வாதிகளை எளிதில் மடக்கி, தெளிவின்மை உணர்த்தியவர்.

பிற்காலத்தில் காசியில் தங்கித் தவம் செய்து வாழ்ந்தபோது, இவருடன் முரண்பட்ட கருத்துடையவராக இருந்து வாதுசெய்ய வந்த துருக்கர் சமய அன்பர்களை வாயடங்கச் செய்தவர்.

## தெய்வ வரலாறு :

இத்தகைய சான்றோர் குமர தருபரரின் தெய்வவரலாறு துறைசை யாதீன மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை யவர்களால் செய்யுள் வடிவில் பாடப்பெற்றுள்ளது.

பரம்பரையாகத் தமிழ்ப்பற்றும் முருக பக்தியும் உடைய நற்குடும்பத்தில், தூய சைவ நன்மரபில் அவதரித்தவர் குமரகுருபரர். மருவிற்கு மணம் இயற்கையாக அமைந்திருப்பதுபோல, இவருக்கு நற்பண்புகள் இயற்கையிலேயே அமைந்திருந்தன.

மதுரையில் மீனாட்சியம்மன்மீது பிள்ளைத்தமிழ் பாடி அரங்கேற்றியபோது, அம்மை சிறு பெண்குழந்தையாக வந்து முத்தாரம் அணிவித்து அணி செய்ததாக அவர் வரலாறு அறிவிக்கிறது.

இளமையில் சிவஞான உபதேசம் பெற விரும்பி, ஞானசிரிய நாட்டமுடையவராகத் தருமையை அடைந்து, ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிகரை வணங்கித் தம் விருப்பம் தெரிவிக்கிறார்.

அவர் இவரைக் காசி சென்றுவரக் கட்டளையிட. அதற்கு நெடுங்காலம் ஆகுமே என்று ஏங்கியபோது, அண்மையிலுள்ள சிதம்பரம் சென்று வணங்கிவரப் பணித்தார்.

சிதம்பரத்தில் இவர் உறைந்த காலத்தில், அங்கு வாழ்ந்த சைவ சமய அன்பர்கள், "யாப்பருங்கலக் காரிகை என்னும் யாப்பு நூலில் வரும் உதாரணப் பாடல்கள் சமண சமயச் சார்பு உடையனவாக உள்ளன; அவைகட்குப் பதிலாக நடராசப்பெருமானைப்பற்றிய பாடல்களாக யாத்துத்தர வேண்டினர். அவர்தம் வேண்டுகோளை நிறைவேற்றவே சிதம்பர செய்யுட்கோவை பாடியிருக்கிறார்.

மீண்டும் தருமையை அடைந்து குருநாதரை வணங்க, அவர் இவரின் பரிபக்குவம் உணர்ந்து, சமயவுண்மை உணர்த்தித் துறவு நிலை வழங்கிக் ' குமரகுருபரர் ' என்ற திருநாமம் சூட்டியிருக்கிறார். அந்த நிலையில் தம் ஆசிரியர்மீது ' மும்மணிக்கோவை ' என்ற நூலைப் பாடி மகிழ்ந்திருக்கிறார்.

**குமாரசாமி மடம் :**

காசி சென்று, கலைமகள் அருளால் இந்துஸ்தானி மொழிபயின்று, அந்த மொழியின் உதவியால், அங்கு மடம் அமைக்கத் துருக்க மன்னரிடம் இடம்பெற்று, அழகிய மடமும் அமைத்திருக்கிறார். அது இப்போது குமாரசாமி மடம் என்ற பெயருடன் சிறந்து விளங்குகின்றது.

அம்மடத்தில் இவர் தங்கியிருந்து சமயப்பணிகள் செய்திருக்கிறார். ஒரு புராணசாலை அமைத்து, ஒவ்வொருநாளும் தமிழ்மொழியிலும் இந்துஸ்தானி மொழியிலும் பெரியபுராணம், கந்தபுராணம் கம்பராமாயனம் முதலிய புராண விளக்கங்கள் செய்திருக்கிறார்.

காசியில் வாழ்ந்த சிறந்த இராமபக்தராகிய துளசிதாசர் இந்தப் புராண விளக்கங்களைக்கேட்டு மகிழ்ந்த செய்தி, உ. வே சா. அவர்களால் விளக்கப்பட்டிருக்கிறது.

கம்பரின் கருத்துக்களை அவர் இந்துஸ்தானியில் பாடிய துளசி இராமாயணத்தில் சேர்க்க, குமரகுருபர முனிவரின் விளக்கமே உதவியதாகவும் உ. வே. சா. குறிக்கின்றார்.

**பாடல் நயம் :**

இத்தகு சிறப்புடைய அருளாளர் பாடிய பல்வேறு செய்யுள் நூல்கள், ' ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பிரபந்தம் ' என்ற பெயரில் வெளிவந்துள்ளன.

அவைகளைப் பயில்வோர் அதன் சிறப்பினை உணரலாம். இவரின் பாடல்களைப் படிப்பவர்கள், அதன் இன்னோசையைச் செவிப்புலனால் உணர்வர், ஏனையோரின் பாடல்களிலிருந்து இவர்பாடல்களைப்பிரித்து உணர்வர்.

இனிய அப்பாடல்களைப் படிக்கும் போதும், பிறர் படிக்கக் கேட்கும்போதும், அவைகளில் பொருநை நதியின் ஓட்டம் நினைவிற்கு வரும். சொற்களும், சொற்றொடர்களும் ஒன்றையொன்று மிஞ்சும் வண்ணம் அமைந்திருப்பதை உணரலாம்.

செய்யுளின் கருத்து, நம் உணர்விற்கு வருமுன், அதன் ஓசை நயம் நம் உள்ளத்தை ஈர்ப்பதை உணரலாம்.

சொல்லின்பத்தைத் தரக்கூடிய - விளைவிக்கக் கூடிய கருவிகள் அப்பாடல்களில் கம்பீரமாக அமைந்துள்ளன. எந்தவகையான யாப்பும் இவரிடம் பேராற்றல் அடைகின்றது.

பாடல்களில் சொற்களும், எதுகை மோனை முதலிய தொடைகளும் எந்த முயற்சியும் இல்லாமல் தாமாகவே அமைந்திருப்பதைக் காணலாம்

சந்தப்பாடல்கள் பாடுவது இயற்கையிலேயே மிகவும் கடினம். அவை இவரிடம் அடங்கி ஒடுங்கி இவர் ஏவல் கேட்டு நடந்துள்ளன.

கற்பார்க்கு இன்பம்தரும் விருத்தப்பாடல்களும். வெண்பாக்களும் இவரின் உடைமைபோல் காணப்படுகின்றன.

**தமிழார்வம் :**

உலகியல் பொருள்களில் எதனையும் விரும்பாத முனிவர், தமிழ்ப் புலமையை மிகவும் விரும்பி வேண்டுகிறார்.

" ஆசுமுதல் நாற்கவியும், அட்டாவதானமும், சீர் பேசும் இயல் பல்காப்பியத் தொகையும், ஓசை எழுத்து முதலாம் ஐந்திலக்கணமும் தோய்ந்து பழுத்த தமிழ்ப்புலமையும் " எனக்கு வேண்டும் என்று முருகப்பெருமானிடம் விண்ணப்பிக்கின்றார்.

வாடும் மலர்மாலைகளை இறைவனுக்கு அணிவிப்பதைவிட, வாடாத தமிழ்ப்பாமாலைகளைச் சூட ஆசைப்பட்டிருக்கின்றார். அச் செயலே அவர்தம் சிந்தைக்கு நிறைவு தந்திருக்கிறது.

" செய்வினை முடித்த செம்மல் உள்ளமொடு வாழி எம்மனனும், மணிநாவும்மே " என்று வாழ்த்துகின்றார். இது உவகையால் வந்த பெருமிதமாகும்.

இராமபிரான் வந்தனன் என்ற செய்தியைக் கேட்டபரதன், " வேதியர்தமைத் தொழும்; வேந்தரைத் தொழும்; தாதியர்தமைத் தொழும்; தன்னைத் தான் தொழும் " என்று பாடுவர் கம்பர்.

பரதன் தன்னைத் தான் தொழுதல் இங்கு உணர்வின் உச்சநிலையாகும். அதுபோல, தான்பெற்ற தமிழ்ப்புலமையால் பாமாலைசூட்டி மகிழ்ந்த இவர், உவகை மிகுதியால், தம்மனத்தையும் நாவையும் வாழ்த்துவது உச்சநிலையாகும்.

**முந்துநூல் புலமை :**

முந்துநூல் புலமை நிரம்பப்பெற்றவராகிய இவர் நிறைந்த இலக்கணப் பயிற்சியுடையவராக விளங்கியிருக்கிருர். இலக்கணக் கவிஞராகிய இவருக்கு ஒரு ஐயம் தோன்றுகின்றது அது; சிவபெருமானுக்கும் உமாதேவிக்கும் உருவம் ஒன்று. அவ்வுருவை, ஒருத்தன் என்று சொல்வதா? ஒருத்தி என்று சொல்வதா? என்று யோசிக்கின்ருர்.

சொல் இலக்கணம் முழுவதும் நினைத்துப் பார்க்கின்ருர். அப்போது, "ஒருவர் என்பது உயர் இருபாற்ருய்ப் பன்மை வினை கொளும் பாங்கிற்றென்ப" என்னும் நன்னூல் நூற்பா நினைவிற்கு கின்றது.

ஆகா, இந்தச்சொல்லை, ஒருவர் என்ற சொல்லை இலக்கணநூலார் பெருவிடில், எவ்வளவு திண்டாட்டம் நேரும். இந்த ஒருவர் என்னும் சொல் அம்மையப்பனுகிய அர்த்தனரீசுவர திருவுருவத்திற்காகவே ஏற்பட்டது என்று தோன்றுகிறது என்று வியக்கின்ருர்.

"ஒருவனுக்கும் ஒருத்திக்கும் உருவு ஒன்ருல், அவ்வுருவை, ஒருவன் என்கோ? ஒருத்தி என்கோ? இருவருக்கும் உரித்தால், ஒருவர் என்று ஓர் இயற்சொல் இலது எனில், யான் மற்று என் செய்கோ? என்பது அவர்தம்பாடல்.

**உலகியலறிவு :**

நூலறிவும் அதனுற்கிடைத்த மதிநுட்பமும் உடைய இவர், உலகியலறிவும் நிரம்ப உடையவர். உலகில் தாம் கண்டவைகளையும் கேட்டவைகளையும் தம் கவிதையில் அமைத்துப் பாடியுள்ளார்.

ஒரு கடவுள், ஒரு நாடு, ஒரு மொழி, ஒரு கலை என்ற வேறுபாடு இல்லாமல் - வரையறையெதுவும் கொள்ளாமல், அனைத்தையும் பாடியுள்ளார்.

தென் திசைச் செந்தூரைப் பாடிய இவர் வடதிசைக் காசி நகரையும் புகழ்ந்து போற்றியுள்ளார்.

தாம் பிறந்த பாண்டிய நாட்டையும், குருநாதரைப்பெற்ற சோழ நாட்டையும், வாழ்ந்த கங்கைக்கரையையும் புகழ்ந்து பாராட்டத் தவறவில்லை.

சிவபிரானைப் பாடிப் பரவிய இவர், கலைமகள் முதலிய சிறு தெய்வங்களையும் வாழ்த்தியுரைக்கின்ருர்.

வைணவ சமய உண்மைகளையும் அங்கங்கே அமைத்துப் பாட மறந்தாரில்லை. இவைகளால், இவருடைய "யாதும் ஊரே யாவருங் கேளிர்" என்ற மன நிலையை உணரலாம்.

ஆன்ற அறிவால், சிறந்த தவத்தால் மனிதவடிவில் வாழ்ந்து, நல்வழியுரைத்த இம்முனிவர்பிரான், இந்திய மண்ணில் வாழ்ந்த அருளாளர்களில் தலைமைசான்றவர் ஆவார்.

**இருநெறி விளக்கம் :**

மனிதவாழ்வின் இரு நெறிகள் குறித்து இவர் தரும் தொகுப்பினைச் சிந்தனை செய்யுங்கள்.

நல்ல நூல்களைக்கற்று. அவற்றின்வழிநின்று, கற்புடைய மனைவியோடு, மகப்பேற்றை விரும்பி, நன்னாளில் இன்பம் துய்த்து, அன்பும் அருளும் உடையவனாகி, இன்சொற்கூறி, விருந்தினர், அருந்தவர் உபசரித்து, ஐவகை வேள்வியாற்றி, பிற அறம் நிறைவேற்றிப், புகழ் பூண்டு, பிறமனை நயவாமல் வாழ்வது இல்லறம் என்கிறார்.

இல்லறம்பூண்டு வாழ்ந்தபின் ஞானநூல் கேட்டு, மெய்யறிவு பெற்று, பொருளையும் இன்பத்தையும் நீக்கி, அருள், பொறை, ஆற்றல், ஒழுக்கம், வாய்மை, தவம் முதலிய குணங்களுடன், பிற உயிர் காத்துக், காலால் நடந்து. தோலுடுத்து, உடம்பு இளைத்து, மலை காடுகளில் சருகு, இலை, நீர் அருந்திப் பனிக்காலத்தில் தண்புனல் மூழ்கி, வேனிற்காலத்தில் பஞ்சாக்கினியில் இருந்து தவம்புரிதல் துறவறம் என்றும் வரையறுக்கின்றார்.

---

## பார்வையாளர் குறிப்பு

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

### சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானம்

இன்று இத்திருக்கோயிலுக்கு எங்கள் பள்ளி ஆசிரியர்கள் குடும்பத்துடன்வந்து தரிசிக்கும் பாக்கியம் கிட்டியது. கோயில் உள்ளும் புறமும் மிகவும் தூய்மையாக இருப்பது போற்றுதற்குரியது. அர்ச்சனை மிக இனிமையாகவும் பக்தி பரவசமூட்டும் வகையிலும் இருந்தது. ஓதுவார் இனிய குரலில் வெகு அருமையாக 'அபிராமி அந்தாதி' பாடியது நெஞ்சில் நிலைத்துநிற்கும். திருக்கோயில் நிர்வாகத்தினர் அனைவருக்கும் நன்றி.

Head Master
S. K. D. J. Higher Secontary School,
Tiruverkadu, Madras. - 77.

8—8—79.

# செய்திகள்

## ஆயில்யத் திருநாள் ஆலய வழிபாடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் 26 ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் ஜன்மநட்சத்திரமாகிய ஆயில்யத் திருநாள் வழிபாடு ஆவணித்திங்கள் 6 ஆம்நாள் (22—8—79) புதன்கிழமையன்று திருமயிலாடுதுறை, திருவிளநகர் திருக்கோயில்களில் சிறப்பாக நடை பெற்றது. காலையில் தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருவிள நகர் அருள்மிகு துறைகாட்டும்வள்ளலார் ஆலயத்திலும் மாலையில் திருமயிலாடுதுறை (மாயூரம்) திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமான அருள்மிகு மாயூரநாதர் ஆலயத்திலும் விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் மிகச் சிறப்பாக நடைபெற்றது. வழிபாட்டின்போது அவ்வத்தலத் திருப்பதிகங்கள் பாராயணம் செய்யப்பெற்றன. மேலும் வரலாறு குறிப்புரைகளுடன் திருப்பதிகங்கள் அடங்கிய நூலொன்று வெளியிட்டு அன்பர்களுக்கு வழங்கப் பட்டது. திருவிளநகரில் காலை வழிபாட்டு நிறைவில் வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ., அவர்கள் "திருப்பதிகச் சிறப்பு" என்னும் தலைப்பிலும், மாலையில் மாயூரநாதர் திருக்கோயில் வழிபாட்டின் நிறைவில் தருமையாதீனத்திற்குச் சொந்தமான குமரக் கட்டளை அருள்மிகு சுப்பிரமணியசுவாமி தேவஸ்தான அலங்கார மண்டபத்தில் புலவர். திரு. இரா. செல்வக்கணபதி எம்.ஏ., அவர்கள் "திருமுறைகள்" என்னும் தலைப்பிலும் விரிவுரையாற்றினார்கள். அன்பர்கள் பலர் வழிபாட்டில் கலந்துகொண்டும் விரிவுரைகளைக் கேட்டும் பயன்பெற்றனர்.

## குருபெயர்ச்சி விழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான மாயூரம் – வள்ளலார்கோயில் ஸ்ரீ வதான்யேசுவரசுவாமி தேவஸ் தானத்தில் குருபெயர்ச்சி விழா 22—8—79 புதன்கிழமை சிறப்பாக நடைபெற்றது. அன்று ஸ்ரீ குருபகவான் கடக ராசியிலிருந்து சிம்ம ராசிக்கு எழுந்தருளினர். அதனை முன்னிட்டு ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்களின் திருவுளப்பாங்கின்வண்ணம் ஸ்ரீ மேதா தட்சிணாமூர்த்திக்கு 2—8—79 வியாழக்கிழமை முதல் தொடங்கி

லட்சார்ச்சனையும் விசேஷ அபிஷேக ஆராதனைகளும் நடைபெற்றன. 22-8-79 அன்று மாலை லட்சார்ச்சனை நிறைவுற்றது. தருமையாதீனம். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றி அன்பர்களுக்குப் பிரசாதம் வழங்கி ஆசியருளினார்கள். மாயூரம் நகர பெருமக்கள் பலரும் வழிபாட்டில் கலந்து கொண்டு பயன்பெற்றனர். அன்று மாலை 7 மணியளவில் புலவர். திரு. இரா. செல்வக்கணபதி எம். ஏ., அவர்கள் "குருபெயர்ச்சி விழாச் சிறப்பு" என்பதுபற்றி விரிவுரையாற்றினார்கள்.

## ஆடிவெள்ளிச் சிறப்பு வழிபாடு

தருமையாதீனம் ஸ்ரீ அஷ்டாதசபுஜ மகாலக்ஷ்மி துர்க்காம்பிகை திருக்கோயிலில் 10-8-79 அன்று ஆடிக்கடைவெள்ளிக்கிழமையை முன்னிட்டு ஸ்ரீ துர்க்காம்பிகைக்கு உலகநலங்கருதி சிறப்பு வழிபாடு நடைபெற்றது. அன்று காலை விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனைகளும் மாலை 6 மணி அளவில் நவசக்தி அருச்சனையும் நடைபெற்றது. 7 மணி அளவில் 51 திருவிளக்குகள் வைத்து 51 கன்னிப் பெண்கள் வழிபாடு நிகழ்த்தினர். ஆதீனத் தேவாரப்பாடசாலை ஆசிரியர் மாணவர்கள் அபிராமி அந்தாதி பாராயணம் நிகழ்த்தினர். காலை மாலை இருவேளைகளிலும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றி அன்பர்களுக்கு பிரசாதம் வழங்கி ஆசி அருளினார்கள். பக்தர்கள் பலர்வந்து வழிபட்டுப் பயன்பெற்றனர்.

## மறைஞானசம்பந்தர் குருபூஜை விழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் ஸ்ரீ ஞானபுரீசுவர சுவாமி திருக்கோயிலில் ஸ்ரீ மறைஞானசம்பந்தர் குருபூஜை விழா 25—8—79 சனிக்கிழமை சிறப்பாக நடைபெற்றது. அன்று காலை சந்தானாசாரியர்களுக்கு விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனைகள் நடைபெற்றன. மாலையில் "மறைஞானசம்பந்தர்", "வினாவெண்பா" என்ற தலைப்புக்களில் விரிவுரைகள் நடைபெற்றன. ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் காலை மாலை இருவேளைகளிலும் எழுந்தருளி வழிபாடாற்றி அன்பர்களுக்குப் பிரசாதம் வழங்கி அருளினார்கள்.

அன்று சிதம்பரம் திருக்களாஞ்சேரி சிங்காரத்தோப்பில் திருவாவடுதுறை ஆதீன அருளாட்சியில் உள்ள ஸ்ரீ மறைஞானசம்பந்தர் குருமூர்த்த ஆலயத்தில் ஸ்ரீமறைஞானசம்பந்தருக்கு தருமையாதீனச் சார்பில் விசேஷ அபிஷேக ஆராதனைகளும் சிறப்பு வழிபாடுகளும் நடைபெற்றன.

# ஆவணிமூலப் பெருவிழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்தில் ஆவணிமூலப் பெருவிழா சிறப்பாக நடைபெற்றது விழா நாட்களில் தருமை யாதீன ஆன்மார்த்த மூர்த்தியாக விளங்கும் ஸ்ரீ சொக்கநாதப்பெரு மானுக்கு விசேஷ ஆபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன. 1—9—79 சனிக்கிழமை ஆவணி மூல நன்னாள் மணிவாசகரின் பக்திப் பெருமையை உலகிற்கு உணர்த்திய திருநாள். அன்று காலை ஸ்ரீ சொக்கநாதப்பெருமானுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் சிறப்பு வழிபாடு நடைபெற்றது. சைவமெய்யன்பர்கள் பலர் வந்து வழிபட்டுத் திருவருள்பெற்றனர். இந்நன்னாளில் அறிஞர் ஒருவருக்கு ஆண்டுதோறும் சிறப்புப் பட்டமளித்து ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் ஆசியருள்வார்கள் அம்முறையில் 1—9—79 சனிக்கிழமை மாலை வழிபாட்டின்போது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் ஸ்ரீ சொக்கநாதப்பெருமான் சந்நிதியில் சென்னைப் பல்கலைக் கழக தத்துவத்துறையாளர் டாக்டர் திரு. வை. இரத்தினசபாபதி அவர் களுக்கு "சித்தாந்த கலைஞர்" என்ற பட்டமளித்து பொன்னுடை போர்த்தி ஆசி வழங்கியருளினார்கள். ஆவணிமூல விழாவையொட்டி மூன்று நாட்கள் ஆதீனக் கல்வி நிலையங்களின் ஆண்டுவிழா திரு நெறிய தெய்வத் தமிழ்மன்றத்தில் வழக்கம்போல் நடைபெற்றது. 30—8—79 வியாழக்கிழமை 3-மணியளவில் ஸ்ரீ குருஞானசம்பந்தர் தொடக்கப்பள்ளி, உயர்நிலைபள்ளிகளின் ஆண்டுவிழா நடைபெற்றது இவ்விழா தமிழ்த் திருநாளாக கொண்டாப்பெற்றது. அன்று வித்துவான் திரு. வி. சபேசன், வித்துவான் திரு. மு. சிவச்சந்திரன், வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன் ஆகியோர் முறையே இயற் றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் என்ற தலைப்பில் விரிவுரையாற் றினர். ஸ்ரீ குருஞானசம்பந்தர் தொடக்கப்பள்ளி கலை நிகழ்ச்சியோடு விழா இனிது நிறைவுற்றது. 31—8—79 வெள்ளிக்கிழமை தேவாரப் பாடசாலை வேதசிவாகம பாடசாலை ஆண்டுவிழா சமுதாயத் திரு நாளாக கொண்டப்பெற்றது. புலவர் திரு. இரா. செல்வகணபதி, வித்துவான் திரு. வி. சா. குருசாமிதேசிகர் ஆகியோர் 'சமுதாய நம்பிக்கைகள்,' 'சமுதாய விழாக்கள்' என்ற தலைப்பில் விரிவுரை யாற்றினர். ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர்நிலைப்பள்ளி கலை நிகழ்ச்சி யோடுவிழா இனிது நிறைவுற்றது.

1—9—79 சனிக்கிழமை தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி சைவசித்தாந்தக் கல்லூரிகளின் ஆண்டுவிழா தத்துவத் திருநாளாகக் கொண்டாடப்பெற்றது. இறைவணக்கத்திற்குப்பின் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் அருளாசி வழங்கினார்கள், அன்று தமிழ்நாடு அரசு கல்வி அமைச்சர் மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் M.A.B.T.

அவர்கள் விழாப்பேருரையாற்றி ஆதீனக் கல்விநிலைய மாணவ மாணவிகளுக்குப் பரிசுகள் அளித்தார்கள். தொடர்ந்து சென்னை, மும்மொழிக்கொண்டல், திரு. பெ. திருஞானசம்பந்தம்பிள்ளை M.A.L.T. அவர்கள் "செந்தமிழ்நாட்டில் சித்தாந்தக் கலைவளர்ச்சி" என்ற தலைப்பில் விரிவுரையாற்றினர்கள். டாக்டர். திரு. சொ. சிங்கார வேலன் M.A.Ph.D. அவர்கள் இவ்வாண்டு "சித்தாந்தக்கலைஞர்" பட்டம் பெற்ற டாக்டர். திரு. வை. இரத்தினசபாபதி அவர்களது சிறப்புக்களை எடுத்துக்கூறி பாராட்டிப் பேசினுர்கள். டாக்டர். திரு. வை. இரத்தினசபாபதி M.A.Ph.D அவர்கள் தமக்குப் பொன்னுடை போர்த்தி, பட்டம் வழங்கிச் சிறப்பித்த ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களுக்குத் தமது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொண்டார்கள். இறுதியில் தருமையாதீனப் பல்கலைக்கல்லூரி மாணவர்கள் "மங்கலப் பொருட்கள்" என்ற தலைப்பில் கவியரங்கம் ஏறினர். இறைவழிபாட்டோடு விழா இனிது நிறைவேறியது.

### சென்னை, தருமையாதீன சமயப் பிரசார நிலையத்தில்

## கிருத்திகைப் பிரசாதம் வழங்கும் விழா

இவ்விழா 16—8—79 வியாழக்கிழமை மாலை 7-மணிக்கு நிலையமன்றத்தில் திருமுருக. பொழி. ஞானமூர்த்தி அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

ஸ்ரீ செல்வமுத்துக்குமார சுவாமி படத்திற்கு அர்ச்சனை செய்த பிறகு புலவர் திரு.N. இராமலிங்கமும் திரு.N. இராமமூர்த்தி அய்யரும் வேளூர்ப் பதிகங்களையும் முருகன் நாமாவளிகளையும் பாடினர்

நிலைய சுவாமிகள் எல்லோரையும் வரவேற்றுப் பேசுகையில், ஆடிக் கிருத்திகையின் சிறப்புக்களை எடுத்துக்கூறி நிகழவிருக்கும் குருபெயர்ச்சிக்குமுன் இந்தப் பிரசாதங்களைப் பெற்றுக்கொள்வது எல்லோருக்கும் நன்மையைப்பயக்கக்கூடியது என்று சொல்லி,விழாத் தலைவரும் அவரது துணைவியாரும் அறிவுடன் கூடிய பக்தியில் ஈடுபாடு கொண்டிருப்பதைப் பாராட்டிப் பேசினுர்கள்.

விழாத்தலைவர் திருமுருக. பொழி. ஞானமூர்த்தி அவர்கள் பேசுகையில், இந்த விழாவில் கலந்துகொள்ள வாய்ப்புகிடைத்தது தனது பெரும்பாக்கியம் என்றும், அதற்கு நிலைய சுவாமிகளுக்கும் மற்றுள்ள பக்தகோடிகளுக்கும் தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். நாம் எப்படிவாழ்வது என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். அதற்கு தெய்வவழிபாடுதான் உதவிபுரியும். அப்படி

வழிபடும்போது, கடந்தகால நிகழ்ச்சிகளை நினைத்து கவலைப்படாமல் வருங்காலம் சரியாக அமையவேண்டுமே என்கிற குறிக்கோளை கருத்தில் கொண்டு, நிகழ்கால நிகழ்ச்சிகளைத் தக்கமுறையில் அமைத்துக் கொள்ளவேண்டும். வழிபாட்டிலும் ஒரு தெய்வவழிபாடு மிகவும் சிறந்தது. எந்த தெய்வமானுலும்சரி, அந்தத் தெய்வத்தை தனது இஷ்ட தெய்வமாகக் கொண்டு வழிபட்டால், எல்லா சித்திகளையும் அடையலாம். முருகனை நினைத்து வழிபட்டால், எந்த தெய்வமும் அந்த இடத்திற்கு வந்துவிடும். திருப்புகழ், கந்தர் அனுபூதி, போன்ற பாடல்கள் நமது மனதைப் பக்குவப்படுத்துவதற்கு அமைந்திருக்கின்றன அவைகளின் பொருள் உணர்ந்து, மெய்மறந்து மனம் லயித்துப் பாடவேண்டும். அவ்விதம் செய்தால் முருக தரிசனமே நமக்குக் கிடைக்கும். வாழ்வதிலும் நமக்காக என்று வாழாமல், நாட்டு நலனுக்கும், மக்கள் நலனுக்கும் உகந்த வகையில் வாழ்க்கை முறையை அமைத்துக் கொள்ளவேண்டும் என்று கூறினுர்கள்.

விழாத் தலைவரின் துணைவியாரும் கூட்டத்தில் பேசினுர்கள். பக்தி என்றும், வழிபாடு என்றும் சொன்னுல், அது மனதை மாசு படுத்தும் மும்மலங்களை அகற்றவேண்டும். மனம் ஒன்றி வழிபாடு செய்தால் முப்பலனையும் அடையலாம். உருவ வழிபாட்டில் ஈடுபடும் போது பக்திப் பாடல்களைப் பாடவேண்டும். மனம், மெய், வாக்கு மூன்றும் ஒருமிக்க வழிபாட்டில் ஈடுபட்டிருக்க வேண்டும். முருகனுடைய திருவடிகளை அடைவதற்கு அவனுக்குரிய வேலின் மூலமும் மயிலின் மூலமும் வழிபடவேண்டும். அங்கு வழங்கப்படும் பிரசாதங்களைப்பெற்று நம் காதலால் அவனது காலைப்பிடித்து உய்யும்வழியைத் தேடவேண்டும் என்று சொன்னுர்கள்.

பின்னர் நிலைய சுவாமிகள் எல்லோருக்கும் நன்றி கூறிய பின், பிரசாதங்கள் வழங்கப்பெற்று விழா நிறைவுற்றது.

## மாதாந்தர சமயப் பிரசார வழிபாடு

இம்மாத சமயப் பிரசார வழிபாடு 26—8—79 மாலை 4-25 முதல் 8-30 மணிவரை, விநாயக சதுர்த்தியை முன்னிட்டு, சென்னை மகாலிங்கபுரத்தில் உள்ள ஸ்ரீ நவநிதி செல்வ விநாயகர் ஆலயத்தில் சிறப்பாக நடைபெற்றது. வழிபாட்டின்போது திரு. கோ. ஷண்முக சுந்தரம், திரு. N. இராமலிங்கம் ஆகியோர் திருமுறைப் பாராயணம் செய்தனர்.

வழிபாட்டிற்குப் பிறகு சமயப்பிரசாரக் கூட்டம் நடைபெற்றது. கடவுள் வணக்கத்திற்குப் பின் திரு. A. நாராயணசுவாமி அய்யர் எல்லோரையும் வரவேற்றுப் பேசினுர்.

புலவர் திரு. H. வெங்கட்ராமன் ஸ்ரீ விநாயகப் பெருமானுடைய பெருமைகளை எடுத்துரைத்தார், மக்கள் பிறவியில் பலவிதமான குறைபாடுகள் ஏற்படுவதுண்டு. எவ்விதக் குறைபாடும் இல்லாமல் நாம் பிறந்திருப்பதற்கு கடவுளுக்கு அன்புக்காணிக்கை செலுத்த வேண்டும். மனிதன் ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்று குற்றங்களையும் முதலில் ஒழித்தால், மற்ற குற்றங்கள் தானுகவே ஒழிந்துவிடும். மெய், வாய், கண், மூக்கு, செவி என்கிற ஐம்புலன் களையும் அடக்கவேண்டும். இவற்றுள் முன்னணியில் நிற்கும் மனத்தை அடக்கிவிட்டால் மற்ற புலன்களும் தானுக அடங்கிவிடும். இதற்குக் கடவுள் பக்தி வேண்டும். இறைவனைப்பற்றி சதா சிந்தனை செய்து கொண்டிருந்தால், மனதை அடக்கக்கூடிய பக்குவம் ஏற் பட்டுவிடும் என்று கூறினர்.

அடுத்து திரு. D. ஞானமூர்த்தி பேசுகையில், கொடுமைசெய்ப வனை ஒடுக்க கடவுள், உருவம் தாங்கி வருகிருன். கஜமுகா சுரனை அழிக்க விநாயகர் தோன்றினர். அவர் தோன்றிய நாளைத்தான் விநாயகசதுர்த்தியாகக் கொண்டாடுகிறோம். விநாயகரை அன்புடன், பூஜிக்கவேண்டிய முறைப்படி வழிபடவேண்டும். அன்பு ஒன்றுக்குத் தான் கடவுள் கட்டுப்படுவார். உள்ளத்தில் மாசு இல்லாமல் வாழ்ந் தால், கடவுள் நம்மைத் தேடிவருவார். தினந்தோறும் கோயிலுக்கு வந்து மனதை ஒருநிலைப்படுத்தி தியானம் செய்தால் நமக்கு எல்லாம் சித்திக்கும் என்று சொன்னர்.

பிறகு திரு. C, செல்வ நடராஜ முதலியார், விநாயக சதுர்த்தி யன்று எல்லோரும் விநாயகரைப்போற்றி வணங்கவேண்டும். அப்படி வணங்குவோரின் பிரார்த்தனைகளை நிறைவேற்றி வைப்பார் என்று சொல்லி, விநாயகப்பெருமானின் அங்க அமைப்புக்களில் அடங்கி யுள்ள தத்துவங்களையும், பிள்ளையார் பல்வேறு பெயர்களுடன் வழங்குதற்குக் காரணங்களையும் விளக்கிக்கூறினர்கள்.

முடிவில் நிலைய சுவாமிகள் எல்லோருக்கும் நன்றி கூறியபின், கோயிலின் சார்பில் பேசிய திரு. காசி விஸ்வநாதன், தருமை ஆதீன சமயப் பிரசார நிலைய சார்பில் விநாயக சதுர்த்தி தினத்தன்று வழிபாடு நடந்ததால். இக்கோயில் சிறப்படைந்திருக்கிறது என்று சொல்லி நன்றி தெரிவித்துக் கொண்டார் கடவுள் வாழ்த்துடன் கூட்டம் நிறைவுற்றது.

# எதிர்காலம்

## ஜோதிஷம் திரு. A. இராசமாணிக்கம்

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.

**சித்தார்த்தி ஹூ புரட்டாசிமீ 1உ முதல் 31உ முடிய.**

**( 17—9—79 முதல் 17—10—79 முடிய )**

ஸ்ரீ சித்தார்த்திஹு புரட்டாசிமீ 1உ சோமவாரம் பூச நக்ஷத்திரம் கௌலவகரணம் கூடிய காலத்தில் சூரிய உதயம் முதல் 23-நாழிகை 43 விநாடிக்கு மகர லக்கினத்தில் ஸ்ரீ லோகரட்சகரான சூரியபகவான் லோக சுபிட்சார்த்தத்தை முன்னிட்டு தனது ஆட்சி வீடான சிம்மராசியிலிருந்து கன்னியாராசி சங்கிரமணமாக புரட்டாசி மாதப் பிரவேசம் செய்கின்றார். சங்கிரமதேவதை துவாங்கிசி விசித்திர ஆடையுடுத்தி சுவர்ண ஆபரணம் பூண்டு மகிழம்பூச்சூடி வெள்ளைக்குடை பிடித்து ரவிப்பிய சாமரம் வீச தாளவாத்தியத்துடன் வடக்குமுகமாக பயணம் செய்கிறாள். அதன் பலன் லோகத்தில் சகல ஜனங்களுக்கும் சுகம் ஏற்படும். எல்லாவகை பயிர்நிலங்களிலும் உணவு தானியங்களின் விளைவு மிகும். ஆன்றோர்களின் அரிய முயற்சியில் உலக நாடுகளின் முன்னேற்றத்திற்கேற்ப தேசங்களில் விஸ்தரிப்பான வித்தியானுபாலனங்களும் தொழிற்கல்வியும் சீறிய முறையில் நடந்துவரும். வித்தியார்த்திகள் கல்விச்செல்வம் மிக்கவராவர் நாட்டில் விஞ்ஞான முன்னேற்றத்தில் தொழிலறிஞர்களால் புதிய பொருள்களின் படைப்பு ஏற்பட்டு தேவையான அளவிற்கு வரும். தேசங்களில் ஈஸ்வர சம்மத பரிபாலனம்நடந்து பிரஜா ரட்சகம் ஏற்படும்.

உலகிலுள்ள திருமடங்கள் ஆசாரியபீடங்களில் மஹோத்தம தவசீலர்களாக விளங்குகின்ற சிவஞான குருமகான்கள் இறைவன் சித்தமாக லோகத்தில் வேதங்கள் சாஸ்திரங்கள் அப்பியசிக்கின்ற புண்ணிய வித்தியாதானங்கள் சிவபுண்ணிய கைங்கரியங்களைச் செய்வித்தும் லோகத்திற்கு தெய்வீக நீதியாக நன்மார்க்கங்கள் எடுத்தியம்பியும் அருள்வார்கள். தேசங்களில் எங்கும் தேவாலயங்களில் நித்தியம் ஆறுகால பூசைகள் விசேஷ ஆராதனைகள் சிறப்பாக நடைபெற்றுவரும். எல்லா பிரஜைகளும் ஈஸ்வர பக்தியுடன் க்ஷேமகரமாக வாழ்வார்கள்.

**1. மேஷம் :- அசுவதி - பரணி – கார்த்திகை $\frac{1}{4}$**

( சு. சே. சோ. லா. - லி. லு. லே. லோ. - அ. )

மேஷராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். குடும்பாபி விருத்தியில் பணவருமானங்கள் கண்ட நிலைமைக்கு ஏற்ப வந்து கொண்டிருக்கும். சகோதரருக்கு அரசாங்க நன்மை ஏற்படும். வித்துவத்துவம் கலைத்துறைகளில் புகழ் ஓங்கும். சான்றோர்கள் அவையில் தலைமை வகித்தல் போற்றுதல் பாக்கள் வாசிக்கப்பெறு தலாகும் பூர்வசொத்துக்களிலிருந்து நற்பலன் வந்துசேரும். வழக்கு விவகாரங்களில் ஜெயபிராப்தியாகும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். புரட்டாசிமீ 9உ 53 நாழிகை 7 விஞடி முதல் 12உ 9 நாழிகை 20 விஞடி வரையில் சந்திராஷ்டமம். திங்கள் செவ்வாய் சுபமாகும்.

**2. ரிஷபம் :- கார்த்திகை $\frac{3}{4}$ - உரோகிணி – மிருகசீர்ஷம் $\frac{1}{2}$**

( இ. ஊ. ஏ. - ஓ. வ. வி. வூ - வே. வோ. )

ரிஷபராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். குடும்பாபி விருத்தியில் மாத முன்பகுதியைவிட பின்பகுதியில் அதிக பணவரு மானம் ஏற்படும். பூமி இயந்திரங்களில் சாதாரண பலனுக இருந்து வரும். வித்தியாவியாபாராதி கலைத்துறைகளில்பிரசித்தநிலைமை ஆகும் 13உ க்குமேல் கணிசமான ஓர் பொருள் வந்துசேரும். வாகனசுகம் திருப்தியளிக்கும் வயிற்றில் எரிச்சல் அஜீர்ணம் ஏற்பட்டு உடன் குணமாகும். ஞாயிற்றுக்கிழமை சூரியார்ச்சனை செய்வதால் நலம் தரும். தாம்பத்திய வாழ்வில் சுமுகம் நிலவும். புரட்டாசிமீ 12உ 9 நாழிகை 20 விஞடிமுதல் 14உ 19 நாழிகை 53 விஞடி வரையில் சந்திராஷ்டமம் புதன் வியாழன் சுபமாகும்.

**3. மிதுனம் :- மிருகசீர்ஷம் $\frac{1}{2}$ - திருவாதிரை – புனர்பூசம் $\frac{3}{4}$**

( கா. கி. - கு. க. ங. ச்சா. - கே. கோ. ஹ. )

மிதுனராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். குடும்பாபி விருத்தியில் பணம் வரவும் செலவும் சரிசமனுக இருந்துவரும். எல்லா விஷயங்களிலும் அந்தஸ்து மேலிடும். சர்ச்சைக்கிடமாக வருகிற விஷயங்களில் மௌனமாக இருந்துகொள்ளுதல் நலம். வித்தியா வியாபாராதி கலைத்துறைகளில் நல்ல நிலைமையை ஏற்படுத்தும். வீடு வாகனுதிகளின் சௌகரியம் மேலாக இருந்துவரும். தாரபுத்திரர் களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். புரட்டாசிமீ 14உ 19 - நாழிகை 53 விஞடி முதல் 16உ 26 நாழிகை 32 விஞடி வரையில் சந்திராஷ்டமம். வெள்ளி சனி சுபமாகும்.

4. **கடகம் :- புனர்பூசம் ¼ – பூசம் – ஆயில்யம்.**
( ஹி. - ஹு. ஹே. ஹோ. ட. - டி. டு. டே. டோ. )

கடகராசி 9 பாதங்களும் சுபபலனுக நடந்துவரும். குடும்பாபி விருத்தியில் பணவருமானங்களில் நல்ல நிலைமையை ஏற்படுத்தும். இரத்தின பூஷணங்களை யளிக்கும். சகோதரருக்கு அரசாங்க நன்மைகள் ஏற்படும். 21உக்கு வாகனபிராப்தி ஒன்று ஏற்படும். வித்துவத்துவத்தில் புகழ் ஏற்படும். பொதுசபைகளில் தலைமை தாங்குதல் ஆகும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும் எல்லாக் காரியங்களும் மதிநுட்பமாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கும். புரட்டாசிமீ 26 நாழிகை 32 வினடி முதல் 18உ 32 நாழிகை 44 விஞடி வரையில் சந்திராஷ்டமம். ஞாயிறு திங்கள் சுபமாகும்.

5. **சிம்மம் :- மகம் - பூரம் – உத்திரம் ¼**
( ம. மி. மு. மே. - மோ. ட. டி. டு. - டே. )

சிம்மராசி 9 பாதங்களும் மிச்சரபலனுக நடக்கும். குடும்பாபி விருத்தியில் பணவருமானம் கண்யமாக வந்துகொண்டிருக்கும். பூமி இயந்திரங்களின் அபிவிருத்தியிலும் சகோதர சகோதரிகளின் நலனிலும் முக்கிய செலவினங்கள் ஏற்பட்டுக்கொண்டிருக்கும். வித்துவத்துவத்தில் மேன்மை ஸ்திதி ஏற்படும். புத்திரர் பௌத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். தாம்பத்திய வாழ்வில் சுமுகம் நிலவும். புரட்டாசிமீ 18உ 32 நாழிகை 44 விஞடி முதல் 20உ 39 நாழிகை 35 விஞடி வரையில் சந்திராஷ்டமம். செவ்வாய் புதன் சுபமாகும்.

6. **கன்னி :- உத்திரம் ¾ - ஹஸ்தம் - சித்திரை ½**
( டோ. ப. பி. - பு. ஷ. ண. ட. - பே. போ. )

கன்னியராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். குடும்பாபி விருத்தியில் பணம் வரவும் செலவும் சரிசமனுக இருந்துவரும். சகோதரர்களின் நலம் நன்ருக இருந்துவரும். வித்துவத்துவம் கலைத்துறையில் ஜீவனேபாயமான தொழில்துறைகளில் 13உ ஆனல் சிலப்புபலன் தரும். இல்லத்தில் சம்பிரதாயமாக நடக்கவேண்டிய விசேஷங்கள் எதுவும் நல்லவிதமாக நடந்துகொண்டிருக்கும். தாரபுத்திரர்களின் நலம் நன்ருக இருந்துவரும். புரட்டாசிமீ 20உ 39 நாழிகை 35 விஞடிமுதல் 22உ 49 நாழிகை 41 விஞடிவரையில் சந்திராஷ்டமம். வியாழன் வெள்ளி சுபமாகும்.

7. **துலாம் :- சித்திரை ½ – சுவாதி – விசாகம் ¾**
( ர. ரி. - ரு. ரே. ரோ. தா. - தி. து. தே. )

துலாராசி 9 பாதங்களும் மிச்சிர பலனுக நடக்கும். குடும்பாபி விருத்தியில் பண வருமானத்திற்கேர்ப கௌரவச் செலவினங்களும்

இருந்துகொண்டிருக்கும். குல அபிமானத்தினுல் நல்ல காரியங்களைச் செய்யும். பூர்வ சொத்துக்களிலிருந்து நற்பலன் வந்துசேரும். எழுத்துமூல காரியங்களில் ஒப்பந்த லேவாதேவிகளில் எதிர்பார்த்திருந்த பலன் வருவதாகும். புத்திரர் பௌத்திரர்களின் நலம் நன்ருக இருந்துவரும். தாம்பத்திய வாழ்வில் சுமுகம் நிலவும். புரட்டாசிமீ 22உ 49 நாழிகை 41 விஞடி முதல் 25உ 4 நாழிகை 48 விநாடி வரையில் சந்திராஷ்டமம். சனி. ஞாயிறு சுபமாகும்.

**8. விருச்சிகம் :- விசாகம் ¼ - அனுஷம் – கேட்டை.**

(தோ. - ந. நி. நு. நே. - நோ. ய. யி. யு.)

விருச்சிகராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். குடும்பாபிவிருத்தியில் பணவருமானங்கள் பலவிதத்தில் வந்துகொண்டிருக்கும். சகோதரருக்கு நலம்பல ஏற்படும். வித்துவத்துவத்தில் சிறப்பும் தொழில்துறைகளில் முன்னேற்றமும் ஏற்படும். எழுத்து மூலமாக உள்ள அலுவல்கள் உடனுக்குடன் பூர்த்தியடையும். தெய்வ புண்ணிய காரியங்களைச் செய்வதில் ஊக்கம் ஏற்படும். தாரபுத்திரர்களுக்கு சௌக்கிய பலன் தரும். புரட்டாசிமீ 25உ 4 நாழிகை 48 விஞடி முதல் 27உ 25 நாழிகை 56 விஞடி வரையில் சந்திராஷ்டமம் புதன் வியாழன் சுபமாகும்.

**9. தனுசு :- மூலம் – பூராடம் – உத்திராடம் ¼**

(யே. யோ. பா. பி. - பு. த. ப. ட. - பே.)

தனுர்ராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். குடும்பாபிவிருத்தியில் பணவருமானங்கள் திருப்திகரமாக வந்துகொண்டிருக்கும். சகோதரர்களின் ஒத்துழைப்பு அனுசரணை பலம் இருந்துவரும். வீடு வாகன சௌகரியம் மேலாக இருந்துவரும். வித்தியா வியாபாராதி கலைத்துறைகளில் பிரசித்தம் ஏற்படும். வெளியூர் பயணங்களின்போதுஓர்விபத்து வந்து தப்பும். தாரபுத்திரர்களின் செளக்கியம் நன்ருக இருந்துவரும். புரட்டாசிமீ 27உ 25 நாழிகை 56முதல்29உ 52நாழிகை32விஞடிவரையில் சந்திராஷ்டமம் வெள்ளிசனிசுபமாகும்.

**10. மகரம் :- உத்திராடம் ¾ – திருவோணம் – அவிட்டம் ½**

(போ. ஜ. ஜி. - கி. கு. கே. கோ. - கா. கி.)

மகரராசி 9 பாதங்களும் மிச்சரமான பலனைத்தரும். குடும்பாபிவிருத்தியில் பணவருமானங்கள் மூன்று வகையில் வந்துசேரும். மனைவி புத்திரர் சம்பந்தமான அவசிய செலவினங்களும் ஏற்பட்டுக்கொண்டிருக்கும். சகோதர நலம் சாதாரணமாக இருந்துவரும். வீடு வாகனம் இவற்றில் மாறுதலுக்கான பிரச்சினை ஏற்படும். ஜீவனோபாயத்தொழில்களில் மாதப் பின்பகுதியில் நன்மைகள் ஏற்படும்.

புரட்டாசிமீ 29உ 52 நாழிகை 32 விநுடிமுதல் 31உ முடிய சந்திராஷ்டமும். ஞாயிறு திங்கள் சுபமாகும்.

**11. கும்பம் :- அவிட்டம் ½ - சதயம் - பூரட்டாதி ¾**

**( கு, கே. - கோ. ஸ. ஸி. ஸு. - ஸே. ஸோ. தா. )**

கும்பராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். குடும்பாபிவிருத்தியில் பணவருமானங்கள் கண்ணிய நிலைமைக்கு ஏற்ப வந்துகொண்டிருக்கும். சகோதரர் சகோதரிகளின் அபிமானம் மகிழ்ச்சியளிக்கும். பூமி இயந்திரங்களில் விருத்தியான நிலைமையை ஏற்படுத்தும்.வித்தியா வியாபாராதிகளில் எழுத்துமூல ஒப்பந்த லேவாதேவிகளில் எதிர்பார்த்திருந்த பலன் வந்துசேரும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். புரட்டாசிமீ 5உ 4 நாழிகை 7 விநுடி முதல் 7உ 31 நாழிகை 22 விநுடி வரையில் சந்திராஷ்டமம். செவ்வாய் புதன் சுபமாகும்.

**12. மீனம் :- பூரட்டாதி ¼ - உத்திரட்டாதி - ரேவதி.**

**( தி. - து. ஸ. ச. த. - தே. தோ. ச. சி. )**

மீனராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். குடும்பாபிவிருத்தியில் பணவருமானம் எவ்வளவு வரினும் வரவிற்குமுன் செலவினங்கள் காத்துநிற்கும். சகோதரருக்கு மாதப் பின்பகுதியில் ஓர் நன்மை ஏற்படும். பூமியில் இயந்திர சாதனங்களில் நற்பல பிராப்தி உண்டாகும். வித்துவத்துவம் கலைத்துறையில் பிரபஸ்திதியாகவே இருந்துவரும். வீடு வாகன சௌகரியம் தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். புரட்டாசிமீ 7உ 31 நாழிகை 22 விநுடி முதல் 9உ 53 நாழிகை 7 விநுடி வரையில் சந்திராஷ்டமம். வியாழன் வெள்ளி சுபமாகும்.

## நாயன்மார் குருபூஜைகள்

சென்னை, தருமையாதீன சமயப் பிரசார நிலைய பூஜை மடத்தில் 1—8—79 சுந்தரர், கழற்றறிவார் நாயனுர். 4—8—79 கலியநாயனுர், கோட்புலி நாயனுர். 14—8—79 மூர்த்தி நாயனுர், புகழ்ச்சோழ நாயனுர். 20—8—79 செருத்துணை நாயனுர். 21—8—79 புகழ்த்துணை நாயனுர், அதிபத்த நாயனுர். 22—8—79 இளையான்குடிமாற நாயனுர். 20—8—79 குலச்சிறைநாயனுர் குருபூஜைவிழாக்கள் நிகழ்ந்தன. பேராசிரியர். A. அய்யாசாமி M. A., அவர்கள் பெரியபுராணத்திலிருந்து நாயன்மார்களின் வரலாற்றைப் படித்து விளக்கவுரை செய்தார்கள். ஸ்ரீ அப்பர் குருகுல மாணவர்களும் நிலைய அன்பர்களும் கேட்டுப் பயனடைந்தனர்.

# புரட்டாசி மாதச் சிறப்பு நாட்கள்

17—9—79 திங்கள், ஷடசீதி புண்யகாலம். திருவையாறு மாதப்பிறப்பு தீர்த்தம்.

18—9—79 செவ்வாய், பிரதோஷம், கலியுகாதி சன்யஸ்த மஹாளயம்.

19—9—79 புதன், மாதசிவராத்திரி.

20—9—79 வியாழன், போதாயன அமாவாசை, வேளூர் கேதார விரத பூர்த்தி, தருமையாதீன மடாலயத்தில் கேதார விரத பூஜை. கிருஷ்ண சதுர்த்தசி.

21—9—79 வெள்ளி, மகாளய அமாவாசை, தருமையாதீனம் ஸ்ரீ மகா லட்சுமி துர்க்காதேவிக்கு நவராத்திரி உற்சவசண்டிஹோம பூர்வாங்கம்.

22—9—79 சனி, சகலதேவாலயங்களிலும் நவராத்திரிபூஜை ஆரம்பம். தருமையில் ஸ்ரீ மகாலட்சுமிதுர்க்காதேவி சந்நிதியில் சத சண்டியக்ஞாரம்பம். வேளூர், சீகாழி, திருக்கடவூர், திருவை யாறு ஆகிய தலங்களில் நவராத்திரி ஒன்பது நாட்களிலும் அம்பாளுக்கு லக்ஷார்ச்சனை நடைபெறும்.

27—9—79 வியாழன், தருமை ஸ்ரீ துர்க்காம்பிகா சந்நிதியில் மாலை வில்வ விருக்ஷாபிமந்திரணம்.

28—9—79 வெள்ளி, காலை நவபத்திரிகாகிரஹணம்.

29—9—79 சனி, தருமை ஸ்ரீ துர்க்காம்பிகா சண்டியக்ஞ யாகசாலையில் அஷ்டாதச ஆயுத பூஜை.

30—9—79 ஞாயிறு, மகாநவமி, சரஸ்வதிபூஜை. ஆயுதபூஜை, தருமை யாதீனம் மகாலட்சுமிதுர்க்காம்பிகா சந்நிதியில் நடைபெறும் சதசண்டியக்ஞ மகாபூர்ணாகுதி, சோபனத்திரவிய சமர்ப் பணம். இரவுமண்டலபூஜை வேளூர், சீகாழி, திருக்கடவூர், திருவையாறு ஆகிய தலங்களில் அம்பாளுக்கு லக்ஷார்ச்சனை பூர்த்தி.

1—10—79 திங்கள், விஜயதசமி. தருமை ஸ்ரீ மகாலட்சுமிதுர்க்காம் பிகைக்குச் சதசண்டியக்ஞ கலசாபிஷேகம். விசேஷ பூஜை.

3—10—79 புதன், பிரதோஷம்.

4—10—79 வியாழன், நடராஜர் அபிஷேகம்.

5—10—79 வெள்ளி, பௌர்ணமி விரதபூஜை. நிறைபணி. மாத பூஜை யில் அபூபம் சாத்துதல். வேளூர், சீகாழி, திருபுவனம், திருக் கடவூர், திருவையாறு, திருவாரூர் முதலிய தலங்களில் நிறைபணி. வேளூர், திருக்கடவூர் இன்று முதல் 3 தினம் சூரியபூஜை.

9—10—79 செவ்வாய், வேளூர் கிருத்திகை தருமை ஸ்ரீ ஷண்முகர் கிருத்திகை.

12—10—79 வெள்ளி, காளாஷ்டமி.

16—10—79 செவ்வாய், முனீசுவரபூஜை. [ரவி 51-5

17-10—79 புதன், ஸ்ரீ அருணந்திசிவாசாரியார் குருபூஜை. துலா

உ

சிவமயம்

தருமையாதீனம்

# ஸ்ரீ மகாலட்சுமி துர்க்காதேவிக்கு

# 29 ஆவது சதசண்டி வேள்வி விழா

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீகுருமகாசந்நிதானத்தின் திருவுளப் பாங்கின்வண்ணம் ஸ்ரீ அஷ்டாதசபுஜ மகாலட்சுமி துர்க்கா தேவிக்கு நவராத்திரி விழாவை முன்னிட்டு 22—9—1979 சனிக்கிழமை முதல் 1—10—1979 திங்கட்கிழமை வரை 29 ஆவது சதசண்டி வேள்வியும் ஆதீனக் கல்வி நிலையங்களின் கலைமகள் விழாவும் நடைபெறும்.

நாடோறும் காலை மாலை இருவேளைகளிலும் உலக நலன் கருதி, தேவி சந்நிதியில் சதசண்டி வேள்வி நடைபெறும். சுவாசிநீ, குமாரிவடுபூஜை, சதுர்வேத பாராயணம், துர்க்கா சூக்த பாராயணம், திருமுறைப் பாராயணம், அபிராமி அந்தாதி பாராயணம். ஸ்ரீ மகாலட்சுமி துர்க்காதேவிக்கு லட்சார்ச்சனை, ஸ்ரீ வித்தியாசக்ரமாகிய மேருவிற்கு சகஸ்ரநாமார்ச்சனை மற்றும் விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனைகள் நிகழும்.

22—9—79 சதசண்டியக்ஞாரம்பம்.

28—9—79 நவபத்திரிகாகிரகணம்.

29—9—79 அஷ்டாதச ஆயுதபூஜை.

30—9—79 சோபனத்திரவிய சமர்ப்பணம்; மகாபூர்ணாகுதி தீபாராதனை; இரவு மண்டலபூஜை.

1-10—79 ஸ்ரீ மகாலட்சுமி துர்க்காதேவிக்குச் சதசண்டி யக்ஞ கலசாபிஷேகம்; விசேஷ பூஜை.

திருநெறிய தெய்வத் தமிழ் மன்றத்தில் ஆதீனக் கல்வி நிலையங்களின் கலைமகள் விழாவை முன்னிட்டு நாடோறும் அறிஞர்களின் சொற்பொழிவுகளும் மாணவ மாணவியர்களின் கலைநிகழ்ச்சிகளும் நடைபெறும்.

Printed & Published by V. Ramaiah Pillai Manager Dharmapuram Adhinam.